Registered as a Newspaper
பக்கங்கள் 6
விலை ரூபா 5-00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் நாளிதழ் Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 10 (23.4.94) சனிக்கிழமை ஓசை 64

## யாழ் குடாநாட்டில் மலேரியா 13 சதவீதத்தால் குறைந்தது

யாழ் குடாநாட்டில் மலேரியா நோயின் தாக்கம் பதின்மூன்று சதவீதத்தி னால் குறைந்துள்ளதாக மலேரியா தடுப்பு இயக்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக் கையிலிருந்து தெரிய வந்துள்ளது. இவ் வருடம் ஜனவரி மாதம் மலேரியா நோயி னால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5176 எனவும், இவர்களில் 347 பேர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பெப்ரவரி மாதத்தில் 4509 பேர் மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர் எனவும் இவர்களில் 348 பேர் மூளைமலேரியாவினால் பாதிக்கப்பட்டனர் எனவும் தெரிவிக் கப்படுகின்றது. பருத்தித்துறை சுகாதார

(6ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பிற்கு புலிகளே காரணமாம்

### பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது

[கொழும்பு]

அண்மையில் கொழும்பு நகரில் பல முன்னணி ஹோட்டல்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்புகளுக்கு, விடுதலைப் புலிகள் இயக்கமே காரணம் என தெரிய வந்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது!

எனினும் அந்தப் பொறுப்பை ''எல்லாளன் படை'' என்ற ஒன்றின்மீது சுமத்த புலிகள் முயல்வதாக அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

குண்டுகள் வெடிக்கச் செய்வதுபோன்ற குற்றச் செயல்கள் காரணமாக சர்வதேச ரீதியில் தங்களுக்கு ஏற்படும் அபகீர்த்தியிலிருந்து தப்பித்

(6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை ஊடாக வடக்கிற்கு பல்லாயிரம் துருப்புக்கள்

### இறுதித் தாக்குதலுக்கு தயாரிப்பாம்

(கொழும்பு)

வடபகுதியில் யாழ். குடா மீதான இறுதிக்கட்டத் தாக்குதலுக்காக சிறிலங்காப் படைகளில் பெரும்பாலான துருப்புகள் கிழக்கிலிருந்து வடபகுதிக்கு நகர்த்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான படையினர் கடந்தவாரம் முதல் திருகோணமலை துறைமுகம் கொண்டுவரப்பட்டு கடல் மார்க்கமாக வடபகுதிக்கு அனுப்பப்பட்டுவருகின்றனர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### இராணுவம் துப்பாக்கி சூடு

## ஒரு மீனவர் பலி 6 பேரை காணவில்லை

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி பண்ணைக் கடலில் மீனவர் ஒருவர் பலியானார். மேலும் ஆறு பேரைக் காணவில்லை.

ஆனைக்கோட்டை சாவற்காட்டைச்சேர்ந்த 18 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை 7 மணியளவில் நடந்த இத் துப்பாக்கிப் பிரயோகத்திற்குமேலும் ஆறு மீனவர் இலக்காகியிருக்கலாமென அஞ்சப்படுகின்றது. இதேவேளை உயிரிழந்தவரின் பெயர் தெரியவரவில்லை.

### வீரச்சாவு



2-ம் லெப். நல்லதம்பி

கடந்த 19ஆம் திகதியன்று மன்னார் மாவட்டத்திலேற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க]

## கட்சியிலுள்ளஎதிர்ப்பாளருக்கு விஜேதுங்கா கடும் எச்சரிக்கை

### பாராளுமன்றத்தை கலைப்பேன் என மிரட்டல்

(கொழும்பு)

**ஐக்கிய தேசிய கட்சியில் உள்ள தனது எதிர்ப்பாளர்களுக்கு டி. பி. விஜேதுங்கா கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். கட்சித் தலைவர் என்ற ரீதியிலும் ஜனாதிபதி என்ற ரீதியிலும் விடுக்கப்பட்டுள்ள அவ் அறிவுறுத்தலில், தன்னை எதிர்ப்பவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்படும் எனவும், தனது சொல்லை மீறினால் பாராளுமன்றத்தை கலைத்துவிடப் போவதாகவும் டி. பி. விஜேதுங்கா மிரட்டியுள்ளார்.**

எனது செயற் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு தடையாக இருப்பவர்களுக்கு நன்மைக்காக சில நடவடிக் கைகளை எடுக்க வேண்டும். சார்பில் போட்டியிடுவதற்கு அனுமதி வழங்குவேன் அதே படையிலேயே செய்வேன் என மேலும் அவர் கூறினார்.

### பயிலுநர் ஆசிரியர் கவனத்திற்கு

தெல்லிப்பழை - சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமையாற்றும் சாதாரண பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் நிரந்தர உதவி ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக எதிர்வரும் 29 ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இயங்கும் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கோட்டப் பிரதிக்கல்விப்

[6ஆம் பக்கம் பார்க்க]

## கொலராவிற்கு பெண் பலி

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் 'கொலரா' நோய்க்கு இல

## அடுத்த பிரதமரும் நானே எவரும் தடுக்க முடியாது

### ரணில் விக்கிரமசிங்கா கூறுகிறார்

(கொழும்பு)

அடுத்தமுறை பிரதமர் கதிரையில் நானே அமர்வேன் இதனை யாரும் தடுக்க முடியாது. எமது தவறுகளை சீர் செய்துகொண்டு எமது கட்சியை முன்னெடுத்து செல்வோம்என சிறிலங்காபிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரி விதிகளை நீடிப்பது தொடர்பான விவாதத்தின் போது மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார்

நான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டது வெற்றியை நோக்கி கட்சியைக் கொண்டு செல்வதற்கே: எனவே எதிர் காலத்தில் ஒரு சாதாரண

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் 'கொலரா' நோய்க்கு இலக்கான பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு பலியானார். இந்நோய்க்கு இலக்காகி வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு சில மணி நேரத்தில் பலியானார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

டியுள்ளார்.

எனது செயற் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு தடையாக இருப்பவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்படும் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர் என்ற ரீதியிலும் நாட்டின் தலைவர் என்ற வகையிலும் நாட்டின் நன்மைக்காக சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதற்கு அனைவரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அப்படியில்லாவிடின் பாராளுமன்றத்தைக் கலைத்து அதற்கான தேர்தலை நடத்தக்கூட நான் தயங்கப்போவதில்லை.

அப்போது நான் எனக்குத் தேவையானவர்களுக்கு கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு அனுமதி வழங்குவேன் அதே போல தேசிய ரீதியான உறுப்பினர் நியமனத்தினையும் எனது விருப்பத்தின் அடிப்படையிலேயே செய்வேன் என மேலும் அவர் கூறினார்.

இன்று ஜனாதிபதி நடந்து கொள்வதுபோல தொடர்ந்

[6 ஆம் பக்கம் பார்க்க]

செய்து கொண்டு எமது கட்சியை முன்னெடுத்து செல்வோம்என சிறிலங்காபிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட

நான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டது வெற்றியை நோக்கி கட்சியைக் கொண்டு செல்வதற்கே. எனவே எதிர்காலத்தில் ஒரு சாதாரண தேர்தல் மூலம் ஐக்கிய தேசியக்கட்சியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வேன். இதனை யாரும் தடுத்துநிறுத்த முடியாது என தெரிவித்தார்.

மேலும் இது தொடர்பாக தெரிவிக்கையில், அடுத்த முறை நான் இவ் ஆசனத்திலேயே அமர்வேன். எவர் வேண்டுமானாலும் என்னுடன் சவால் விடலாம் என தெரிவித்துள்ளார்.

# தேசங்களின் விடுதலைக்கு குரலாக மே நாள் ஓங்கி ஒலிக்கிறது

## மேதினத்தை ஒட்டி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்

அன்று அடக்கி ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களின் விலங்கை உடைத்தெறிந்த தினமாக மே நாள் கொண்டாடப்பட்டது. ஆனால் இன்று அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலைக் குரலாக மே நாள் ஓங்கி ஒலிக்கிறது.

இவ்வாறு மே நாளையொட்டி, யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற மகாநாட்டில் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு. சிறில் அவர்களின் தலைமையில் நடைபெற்றமகாநாட்டில்யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழ் சங்கப் பொறுப்பாளர் இமையவன், மற்றும் நாற்றுக்கு மேற்பட்ட வெகுஜன அமைப்புக்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்;

மேலும், அறிக்கையில் தெரிவிக்கப்படுவதாவது:

தமிழீழ தேசம் மே நாளுக்கு புதிய வரைவிலக்கணத்தைக் கொடுத்துள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்வளையை நெரிக்கும் ஸ்ரீலங்கா அரசின் அராஜகத் தனத்தை மனித எழுச்சியைக் கொண்டு அடக்க திடசங்கற்பம் பூணுவோம்.

[6ஆம் பக்கம் பார்க்க

# சிறிசேன கூரே கொழும்பு திரும்பினார்

ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச்செயலாளரும்அமைச்சருமான சிறிசேன கூரே கொழும்பு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் உத்தியோக பூர்வ அழைப்பை ஏற்று நேற்றுக் காலை அவர் கொழும்பு திரும்பியுள்ளார். இவர் இரண்டு வாரகால வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை நேற்றுமாலை இவர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# ஐ. தே. க. குழு மோதல் தீவிரகட்டத்திற்கு செல்கிறது

ஐக்கிய தேசியக் கட்சியினுள் குழு மோதல்கள் உச்சகட்டத்தை அடைந்து வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்

இவ்வாறான குழு மோதல்கள் நடைபெறவுள்ள தேர்தல்களில் தோல்வியில் இருந்தும் ஐ. தே. கவிற்கு எந்த ஒரு மீட்சியும் இல்லை என்றும் சுட்டிக்காட்டிய அரசியல் அவதானிகள் தற்போதைய குழு மோதல்கள் அடுத்த தலைமைத்துவத்துக்கான மோதல் என தெரிவித்துள்ளனர்;

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

# வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு சமாதானவழியில் தீர்வு

## பொ. ம. ஐ. முன்னணி தேர்தல் விஞ்ஞாபனம் தயாராகிறது

(கொழும்பு)

வடக்கு,கிழக்குப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணுதல், பொருளாதாரத் தடை காரணமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தவிர்த்தல் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாராகி வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

அடுத்து வரும் தேர்தல்களுக்காக பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

இத்தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் முயற்சியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஜி- எல்- பீரிஸ் மற்றும் முன்னாள் இராணுவ அதிகாரியான பிரிகேடியர் றஞ்சன் சில்வா உட்பட பல முக்கிய பிரமுகர்கள் ஈடுபட்டிருப்பதாகவும் தகவல்

[6ஆம் பக்கம் பார்க்க

# திருமலையில் வாகனத்தால்பீதி

(திருமலை)

திருகோணமலையில் புனித மரியாள் கல்லூரிக்கும் நெல்சன் தியேட்டருக்கும் இடையில் கைவிடப்பட்டு நின்ற ஹைஏயஸ் வான் ஒன்றினால் மக்கள் பீதியடைந்தனர்.

செய்தி நகரில் பரவியதும் வாகனத்தில் வெடி மருந்து வைக்கப்பட்டிருக்கும் என்ற அச்சத்தினால் நகரின் மையப் பகுதிக்கு வருவதை மக்கள் நிறுத்திக் கொண்டனர்- பொலிசார் வீதித்தடைகளை ஏற்படுத்தி தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் பொலிசார் வாகனத்தைப் பரிசோதித்த போது, வாகனத்துள் முதலுதவிப் பெட்டிகள் இருக்கக் கண்டு பிடிக்கப்

[6ஆம் பக்கம் பார்க்க

வடக்கு - கிழக்கு இளைஞர்

# தக்க தருணத்தில் போராடத் தொடங்கினர்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையில் வடக்கு-கிழக்கு மக்கள் எத்தனையோ

. தொண்டமான்

பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் விரக்தி அடைந்த இளைஞர்கள் தக்க தருணத்தில் போராட்டத்தை ஆரம்பித்தனர் அதன் விளைவாக தமிழர்களின் தன்மானம் காக்கப்பட்டது இத்தகைய போராடும்நிலையில்மலையக மக்களாகியநாம் இல்லை என அமைச்

[6ஆம் பக்கம் பார்க்க]

# சந்திரிகா தலைமையை ஏற்க நாம் தயாரில்லை

## களுத்துறை மாவட்ட எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக திருமதி சந்திரிகா குமாரணதுங்க எப்போதாவது வர நேர்ந்தால் அவரின் தலைமைத்துவத்தை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என களுத்துறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம் பி. திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார் பொதுவாழ்வில் இரட்டைத் தன்மையுடன் அவர் செயற்படுவதால் அவரது தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என அவர் கூறியுள்ளார்.

1986 ஜனவரி 31க்குப் பின்னர் கட்சி வருடாந்த மாநாட்டை கூட்டவில்லை. கட்சியின் வருடாந்த மாநாட்டிலேயே தலைவர் தெரிவு செய்யப்படுவது வழமை. 1986 க்குப்பின் கட்சியின் மாநாடு நடைபெறவில்லையாதலால் கட்சித் தலைவர் யார் என்று இன்று எமக்குத் தெரியாது. யாராவது தம்மை கட்சித் தலைவர் என அழைத்துக்

[6ஆம் பக்கம் பார்க்க]

தென்மாகாணத்திலுள்ள

# உல்லாச விடுதிகளுக்கும் எல்லாளன் படை கடிதம்

(கொழும்பு)

தென் மாகாணப் பகுதியில் அமைந்துள்ள உல்லாசப் பயணிகள் விடுதிகளுக்கும் மற்றும் முக்கிய இடங்களுக்கும். எச்சரிக்கைக் கடிதங்கள் எல்லாளன் படையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

தமிழ் மொழியில் எழுதப்படும் இவ் எச்சரிக்கைக் கடி

[6ஆம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### பேட்டுக்குஞ்சு விற்பனை

கைலைன் பிறவுண் 1 1/2 மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (8105)

### கோல்டன் கொமட் விற்பனை

கோல்டன்கொமட் 10 நாட்கள் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள், சேவல்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ''மல்லிகாபதி''சந்தைகிழக்கு ஒழுங்கை,மானிப்பாய்(8106)

### ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

6-4-94 அன்று மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் பணத்துடன் ஒரு கைப்பை கண்டெடுக்கப்பட்டு அந்திவானம் பதிப்பகத்தில் (நாவலர் றோட்)ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெறவும் [8116]

### மில்க்வைற் சலவைத் தூள்

சீருடைகளோ அன்றாட அணிகளோ துணி சலவைக்கு மில்க்வைற் சலவைத் தூள் துரித சலவைக்குப் பளிச்சிடும் வெண்மைக்கு மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப்பக்கெற் 25க்கு ஒரு அப்பியாசக் கொப்பி, நூறுக்கு ஒரு கவர்ச்சியான கைலேஞ்சி வழங்கப்படும்- ''மில்க்வைற்'' (சி-9236)

### அணுசக்தி முன்னேற்றப்பாதையா? முட்டுக்கட்டையா?

பிரச்சினைகள், பயன்கள், விளைவுகள், அணுவின்விலை, அணுஆயுத அதிகரிப்பு, இன்னும்பல அணு பற்றிய கட்டுரைகளுடன்விற்பனையாகிறது வசந்தம் புத்தக நிலையம் (8087)

### நிர்வாகி தெரிவு

(பருத்தித்துறை)

சரித்திரப்பிரசித்தி பெற்ற நசர் கோவில் நாகதம்பிரான் ஆலயபரிபாலன மகாசபைக்கூட்டம் ஆலயதிருமடத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் மு. சிதம்பரப்பிள்ளை செயலாளர் இ செல்வ

# கோகுலனை பாராட்டாது இருக்க முடியாது- இளங்குமரன்

(நமது நிருபர்)

அன்னைபூபதி நினைவுப் பொது அறிவுத்தேர்வு ஆண்டு ஆறிற்கான வினாத்தாள் மிகவும் கடுமையானது என பல புத்திஜீவிகளும் சுட்டிக் காட்டியிருந்த போதும் ஆண்டு ஐந்திலிருந்து தோற்றி தென்மராட்சிக் கோட்டத்திலேயே ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற கோகுலனை பாராட்டாமல் இருக்க முடியாது

இவ்வாறு கடந்தசெவ்வாயன்றுஇரவுதமிழீழக்கல்விக்கழக நடுவப் பணியகத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் தமிழீழக்கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவனான விவேகானந்தன் கோகுலனுக்கு அவரது துணிச்சலையும் அறிவு நுட்பத்தையும் பாராட்டி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன் சிறப்புப் பரிசினை வழங்கி கௌரவித்தது தெரிந்ததே.

இந்நிகழ்வில் திரு. இளங்குமரன் தொடர்ந்து உரையாற்றுகையில் ஆறு புள்ளிகளைக்குறைவாகப் பெற்றதாலேயே கோகுலன் தேசிய ரீதியில் தங்கப்பதக்கம் பெறும் வாய்ப்பைஇழந்தமை மிகவும் வேதனைக்குரியதே.

இம்முறை மேற்படிதேர்வில் யாழ். மாவட்டத்தில் மூவர் மட்டுமே ஆண்டு ஆறில் ஐம்பதிற்கும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றனர். அவர்களில் இருவர் ஆறு ஆண்டில் கற்றவாறே தோற்றியவர்கள்.ஆனால் கோகுலன் ஆண்டு ஐந்தில் கற்றவாறே தோற்றி இப்புள்ளியைப்பெற்றுக் கொண்டது அவரது அறிவாற்றலை வெளிப்படையாகக்காட்டுகிறது என்றார்.

யாழ் இந்துக் கல்லூரி அதிபரான திரு. பஞ்சலிங்கம் உரையாற்றுகையில் பாடசாலைகளிலும் சரி பல்கலைக்கழகங்களிலும் சரி மாணவர்கள் தமது அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை விரும்புவதில்லை. இவர்கள் நூல் நிலையங்களில் உள்ள புத்தகங்களை கூட மற்றவர்கள் எடுத்து பயன்படுத்தி விடுவார்கள் என கருதி வேறு புத்தகங்களுக்குள்ளும் மற்றைய பகுதிகளுக்குள்ளும் மாற்றி வைத்துவிடுவார்கள் கோகுலனும் இவர்களைப் போல்வாழாது தனது அறிவை மற்றவர்களுக்கும் கொடுத்து அவர்களது அறிவும் வளர உதவ வேண்டும் என்றார்.

தென்மராட்சி கோட்டத்தின் கல்விப்பணிப்பாளர் திரு: கந்தசாமி உரைநிகழ்த்துகையில் இன்று தமிழீழத்தில் எவ்வளவோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் தேசியத் தலைவர் இந்தச் சிறுவனையும் ஒரு பொருட்டாக மதித்து அவனது அறிவாற்றலை போற்றி அதனை அவர் மேலும் மேலும் வளர்த்திட உந்து சக்தியாக தனது சிறப்புப் பரிசினை வழங்கி கௌரவித்ததை நாம் அனைவரும் பாராட்டாது இருக்க முடியாது தலைவரின் இத்தகைய செயல்கள் கோகுலன்போன்ற பலர் இந்த தமிழீழத்தில் உருவாக வழி சமைக்கும் என்பதில் ஐயமில்லை என்றார்.

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு பிரான்சிஸ் யோசேப் அடிகளார் தமதுரையில் அன்னையின் மடியிலேயே தான் அறிவு ஊற்றெடுக்கிறது அதனால் தான் அறிவை அன்னையுடன் ஒப்பிடுகிறார்கள். தனது இளவயதிலேயே இச் சிறுவன் தனது அறிவுப் பசியை தீர்த்துக்கொண்டுள்ளான் இன்று சமுதாயத்தில் எங்குபார்த்தாலும் ஏட்டுக் கல்வியிலேயே மாணவர்கள் திறமையுடையவர்களாக இருக்கிறார்கள் இவர்களுக்கெல்லாம் ஒரு விடிவெள்ளியாக கோகுலன் திகழ்கிறான். அவன் தனது சிறுவயதிலேயே ஏட்டுக்கல்வியுடன் இணைத்து தனது பரந்துபட்ட அளவிலான பொது அறிவையும் வளர்த்துவருவது போற்றப்பட வேண்டியதே என்றார்

இறுதியாக தலைவரின்சிறப்புப் பரிசு பெற்ற கோகுலனின் தாயார் அனைவருக்கும்நன்றி தெரிவித்து உரை நிகழ்த்துகையில், இவ்வளவு பெரிய புத்திஜீவிகள் அனைவரும் திரண்டிருந்து எனது மகனை பாராட்டி வாழ்த்தும் போது உண்மையிலேயே உவகை கொள்கிறேன் எனது மகன் இன்று தேசியத் தலைவரின் சிறப்புப் பரிசினை இரண்டாவது தடவையாகவும் பெற்றுக் கொள்கிறான் என்றால் அதற்குரியவர்கள் அவனை ஊக்குவித்த தந்தையும் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுமே என்பதை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன். எனது மகன் தொடர்ந்தும் இவ்வாறான பரிசில்களைப் பெற்று சிறந்த அறிவாளியாக விளங்க உங்கள் அனைவரது ஆசிகளும் அவனுக்கு என்றென்றும் தேவை எனக்

# கண்டல்காடு அழிப்பு தடை செய்யப்பட்டுள்ளது

1993ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க தமிழீழ சட்டக் கோவைப்படி கண்டல் காடுகள் விறகுக்காக வெட்டப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இம்மாதம் முதல் இத்தடை அமுல்படுத்தப்படுகிறது இதனை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது,

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆற்றுநீரும், கடல்நீரும் கலக்கும் கடல் நீரேரியை அண்டிய பகுதிகள் கண்டல் காடுகளின் சூழலாகும். சூழலியல் நோக்கில் மட்டுமன்றி பொருளாதார உயிரியல் நோக்கில் இச் சூழல் தொகுதி முக்கிய பங்கு வகிக்கின்றது.

யாழ் குடாநாட்டிற்கான தரைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு வன்னிப் பிரதேசத்திலிருந்து விறகு எடுத்து வர முடியாத ஒரு நெருக்கடிநிலை தோன்றியுள்ளது எனவே யாழ் குடாநாட்டின் சகல பகுதிகளிலுமிருந்துவிறகு வெட்டுபவர்கள் முன் எப்போதும் இல்லாதவாறு இப்பகுதியை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்

### சோதிட கற்கை

யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் கடந்த மூன்று மாத காலமாக இடம்பெற்று வந்த 'வானியலும் சோதிடக் கலையும்' பற்றிய ஓர் அடிப்படைக் கற்கை நெறித் தொகுதி ஒன்றின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று மாலை 3 மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இவ்வைபவத்தில் பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் என் பாலகிருஷ்ணன் அவர்கள்சான்றிதழ்களை வழங்கி நிறைவுரையாற்றுவார்.

## ஜனாதிபதி தேர்தலுக்கு 280மில்லியன் செலவாகும்

நொவம்பரில் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலுக்கு சுமார் 280 மில்லியன் ரூபா செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது இதனைத் தேர்தல் திணைக்கள வட்டாரத்தினர் கூறுகின்றனர்

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவதற்கு மேலதிகப் பாதுகாப்பு மற்றும் தேர்தல் உத்தியோகத்தர் அதிகமாகத் தேவைப்படும் ஆகவே இரு தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவது சாத்தியபடாது என்றும் கூறப்படுகிறது. இரு தேர்தல்களையும் வெவ்வேறு திகதிகளில் நடத்துவதற்கு 560மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியாவில் மார்ச் முதலாம் திகதி நடைபெற்ற உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தலுக்கும் தெற்கில் நடந்த மாகாண சபைத் தேர்தலுக்கும்,மொத்தம் 60மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டதாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் இத்தேர்தல் செலவுகள் பற்றிய உத்தியோக பூர்வ அறிக்கை வருட இறுதியில் வெளியிடப்படவுள்ளது

#### தீவக கோட்டத்தினால்

## வலைப்பந்தாட்ட அணி உருவாக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

தீவகக்கோட்டத்தினால் வலைப்பந்தாட்ட அணியொன்று உருவாக்கப்படவுள்ளது. இதற்கென இக்கோட்டத்தில் இருந்து பதினைந்து பேர் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்படவுள்ளதாகவும் பெரும்பாலும் அடுத்த மாதம் இப்பயிற்சியளித்தல் ஆரம்பமாகும் எனவும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவின் தீவகக்கோட்ட பொறுப்பாளர் செல்வி வினோ தெரிவித்துள்ளார்- (22)

### இன்றைய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் வர்த்தக ஊழியர் சங்கத்தின்பொதுக்கூட்டம்இன்று சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு தலைவர் என் இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் கொட்டடிநமசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெறும். (88)

∴ ∴ ∴

இன்று மு.ப. 10 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்தில் தொண்டர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.சர்வதேசசெஞ்சிலுவைக்

### போட்டியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில வித்தியாலய மாணவிகளிடையே நடைபெற்ற தனி இசை, பாலர் ஆகிய இரு போட்டிகளில் 10-ம் ஆண்டு மாணவி செல்வி பிருந்தகுமாரி இராமச்சந்திரன் மத்திய பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டார். கடந்த வருடம் யாழ் நகரகொத்தணிப்பாடசாலைகளிடையே நடைபெற்ற பண்ணிசைப் போட்டியிலும் முதலீடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்குரிய சான்றிதழ்களை மேற்படி வித்தியாலயத்


ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

**சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும்**

**விசேட பொதுக்கூட்டம் - 3 4.94**

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 30 4-94-ந் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பி.எஸ். சேவிஸ் நிலையம், அருச்சுனா வீதியில் அமைந்துள்ள சங்கப்பணிமனையில் சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும், தவறாது கூட்டத்திற்கு சமூகம் அளித்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சிநிரல் கிடைக்கப் பெறாதோர் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு செயலாளரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்

ஊர்காவற்றுறை ப, நோ. கூ. சங்கம்

யாழ்ப்பாணம். (சி 9244)


## நினைவு கூருகின்றோம்.

**1994-04-23**

1987-ம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,

**சின்னத்துரை** (நல்லதம்பி சின்னத்தம்பி - முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஸ்கொட்** (யேசுதாசன் அன்ரன்ஸ்கொட்- கள்ளிக்கட்டை, உயிலங்குளம் - மன்னார்)

1991-ம் ஆண்டு யாழ் - வசாவிளான், ஒட்டகப்புலம் பகுதியில் சிறீலங்கா இராணுவம் குறிபார்த்துச் சுட்டதில் வீரச்சாவெய்திய,

**2 லெப் மீரான்** (சண்முகராசா கிருபாகரன் காரைநகர் - யாழ்)

1991 ம் ஆண்டு இராணுவம் மற்றும் தேசவிரோதிகளின் கூட்டுச்சதியினால் கொம்படி வேம்படிப் பகுதியில் உள்ள தேநீர்க்கடையில் பயணப்பைக்குள் மறைத்து வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் சிறுவர், பெண்கள் உட்பட 20 தமிழர்கள்.

சத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் மு. சிதம்பரப்பிள்ளை செயலாளர் இ செல்வநாதன் பொருளாளர் பொ. சிவராஜ 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவானது. (25)

## நிவாரணம் வழங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடற்தொழிலாளருக்கான உலர் உணவு நிவாரணம் கடந்த மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டதையடுத்து நிவாரண உதவிகளை மீள வழங்குமாறு யாழ் அரச அதிபர் சிறீலங்கா அரசைக் கேட்டுள்ளார்.

கடற் தடைச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என அரசு அறிவித்துள்ளது. அத்துடன் உலர்உணவு நிவாரணத்தையும் நிறுத்தியுள்ளது. இதனையடுத்து உலர் உணவு நிவாரணத்தை உடன் வழங்குமாறு கோரி யாழ். அரச அதிபர் நேற்று சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளார்.

## நாளைய நிகழ்வு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப்பிரிவு நாளை முற்பகல் 11 மணிக்கு தமது வருடாந்தப் பொதுக் கூட்டத்தினை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடாத்தவுள்ளது. வைத்திய கலாநிதி வி. தியாகராஜா அவர்களின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் நடைபெறும்.

## மத்திய கல்லூரி சம்பியனாகியது

யாழ் கல்வித்திணைக்களத்தால் கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட ''கரபந்து'' சுற்றுப்போட்டியில் பல முன்னணிப் பாடசாலைகளோடு போட்டியிட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 17 வயது அணியும், 19வயது அணியும் சம்பியனாகியன.

அ... ளுக்கும் கொடுத்து அவர்களது அறிவும் வளர உதவ வேண்டும் என்றார்,

யாழ். கல்வி வலயம் இர...

...வரது ஆசிகளும் அவனுக்கு என்றென்றும் தேவை எனக் கேட்டுக்கொள்கிறேன் என்றார். (ச)

## ஐக்கிய வி. கழகம் முதலிடம் பெற்றது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் முதலாவது இடத்தைத் தட்டிப் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டது.

இப்பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயானவிளையாட்டுப் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மில்லர் விளையாட்டு மைதானத்தில் இருதினங்கள் நடைபெற்றன இரண்டாவது நாள் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு ஆ. சிவசுவாமி தலைமையில் பரிசளிப்புவிழா நடைபெற்றது விழாவிலே பருத்தித்துறை பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வே. தி செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார். தமிழீழ ஆய்வு நிறுவன வடமராட்சி பொறுப்பாளர் திரு. வளவன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. ந நடராஜா சட்டத்தரணி இ உருத்திரா இளைப்பாறிய பிரதேசசெயலர் திரு சி. முருகேசபிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றினர். பரிசில்கள் வழங்கப்பட்டதையடுத்து பிரதேச செயலக நிர்வாக அதிகாரி திரு. க- கணபதிப்பிள்ளை நன்றியுரை கூறினார். (25)

## உணவக முகாமைத்துவம் கற்கை நெறி ஆரம்பம்

யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் உணவகங்களின் முகாமைத்துவம் பற்றிய ஓர் அடிப்படைக் கற்கை நெறியின் ஆரம்பவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ மண்டபத்தில்இடம் பெறவுள்ளது.

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர்திரு இரா சிவசந்திரன்தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள ஆரம்பவிழா வைபவத்தின் ஆரம்பவுரையை பதில் பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் அவர்கள் ஆற்றவுள்ளார். இவ் வைபவத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் திரு. செம்பியன் அவர்களும் யாழ் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் திரு அருள்நேசன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.

இரு மாதங்கள் இடம் பெறவுள்ள இக் கற்கைநெறியின் முதற் தொகுதியில் யாழ் மாநகரசபைக்குட்பட்ட உணவகங்களைச் சேர்ந்த நூறு பேர் கலந்து கொள்கின்றனர் தமிழீழ அனைத்து பிரதேச உணவகங்களைச் சேர்ந்தோர் தொகுதி தொகுதியாக இக் கற்கை நெறியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்

...தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. சர்வதேசசெஞ்சிலுவைக் குழு இக்கருத்தரங்கை நடாத்தவுள்ளது. உறுப்பினர்கள், தொண்டர்கள் இதில் கலந்து கொள்வார்கள்

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும் எனவும் சங்கங்கள் தமது கல்வி உத்தியோகத்தர்களை தவறாது அனுப்பி வைக்குமாறும்யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை அறிவித்துள்ளது (22)

## சித்திரைக் கஞ்சி

கோப்பாய் மத்தி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த சித்திரைக் கஞ்சிவார்ப்பு எதிர்வரும் திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெறயிருக்கிறது. மாலை அம்பாளுக்கு விஷேட பூசையுடன்அம்பாள் வீதிஉலா வரும் காட்சியும் இடம்பெறும்.

## வலைப்பந்தாட்டம்

பருத்தித்துறைக் கோட்ட வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி வட இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நாளைபிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு வே. தி. செல்வரட்ணம் தெரிவித்தார்.

15 வயதுப் பிரிவில் பருத்தித்துறை பெண்கள் உயர் கல்லூரியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரியும், 17 வயதுப் பிரிவில் வட இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து பருத்தித்துறை பெண்கள் உயர் கல்லூரியும், வல்வை மகளிர் கல்லூரியை எதிர்த்து தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை கல்லூரியும், 19 வயதுப் பிரிவில் பருத்தித்துறை பெண்கள் உயர் கல்லூரியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரியும் மோதும்,

இவருக்குரிய சான்றிதழ்களை மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் வைத்து யாழ் திருமறைக்கலாமன்ற இயக்குனர் அருட்திரு நி மரியசேவியர் அடிகள் வழங்கி கௌரவித்தார்.

இவர் வேலணை கோட்டக்கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த சங்கீத ஆசிரிய ஆலோசகர் திருமதி ஸ்ரீரங்கராணிஇராமச்சந்திரனின்சிரேஷ்ட புதல்வியாவார் (88)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

இக்குறியீடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

சி-9233

தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப் படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும்

முன்னணி நிறுவனம்

பமாடம்

சகல விதமான
✵ பூக்கண்ணாடி
✵ சாதாரண கண்ணாடி
✵ அலுமினிய இணைப்புக்கள்
✵ சாமிப்படங்கள்
✵ இனிப்பு கண்ணாடிப்பெட்டிகள்
✵ மீன் தொட்டிகள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மற்றும் சகலவிதமான படங்களைச் சட்டமிட்டுப் பெற்றுக் கொள்ளவும் நாடவேண்டிய

ஒரே ஸ்தாபனம்

பமாடம் அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மலர்ந்த புதுவருடத்திலிருந்து எமது ஸ்தாபனத்தால் சகலவகையான கண்ணாடி வேலைப்பாடுகளும் நியாய விலையில் செய்து கொடுக்கப்படும், என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

(சி-9241)

# கொலை மிரட்டல் விடுத்ததாக பொலிஸ் அதிகாரி மீது வழக்கு

(கொழும்பு)

தென் மாகாணசபை தேர்தல்பிரசார நடவடிக்கையின்போது கைத்துப்பாக்கியினால் தன்னைக் கொலை செய்யபோவதாக மிரட்டிய திஸ்ஸமகாராம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக மொனராகல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமகாராம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காமினி அபய விக்கிரமவுக்கு எதிரகவே மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக மொனராகல பாராளுமன்ற உறுப்பினர் சுமெத ஜயசேன வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

திஸ்ஸமகாராம மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் தனக்கு றிவோல்வர் ஒன்றைக் காட்டி கொலை மிரட்டல் செய்ததாகவும், மற்றும் அவர் செல்லவிடாது பாதை தடைகளில் போட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினரின் மெய்ப்பாதுகாப்புஉத்தியோகத்தரை மேற்படி பொலிஸ் அதிகாரி தாக்கியதாகவும் மற்றும் தேர்தல் காலங்களில் துப்பாக்கி பிரயோகத்தின் போது காயமடைந்த பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொது செயலாளர் டி.டு. ஜயரட்னவை மருத்துவ மனைக்கு கொண்டு செல்வதை தடுக்க முற்பட்டதாகவும் மற்றும் தேர்தல் அபேட்சகர், ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதாகவும் இவர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

**புளொட் குழு கடத்தியவர்**

## சுய நினைவற்ற நிலையில் அநுராதபுரத்தில் அனுமதி

(மன்னார்)

மன்னார் தீவு பகுதியில் வர்த்தகரொருவரிடம் பணத்தை கொள்ளையடித்து அவ் வர்த்தகரை கடத்தி சென்ற புளொட் உறுப்பினர் இருபத்தி இரண்டு பேர் சிறிலங்கா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதே வேளை கடத்திச்செல்லப்பட்ட மேற்படி வர்த்தகர் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் வற்புறுத்தலின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் இவர் சுய நினைவு இழந்த நிலையில் அநுராதபுரம்வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருவதாக தெரிய வருகின்றது.

மன்னார் வைத்தியசாலை வீதி தேநீர்சாலை வர்த்தகரான ராமலிங்கம் பாலச்சந்திரன் என்பவர் மீது இத்தாக்குதல் நடைபெற்றதாகவும் சென்ற 16 ஆம் திகதி இவரது வர்த்தக நிலையத்திற்கு சென்ற புளொட் குழுவினர் அக்கடையை உடைத்து அதில் இருந்த ஒரு லட்சம் ரூபா பணத்தையும் கொள்ளை அடித்து சென்றதாகவும் இது தொடர்பாக பொலிஸாரிடம் புகார் தெரிவித்தபோது 17 ஆம் திகதி இவர் கடத்தப்பட்டதாகதெரியவருகின்றது.

**நினைவுப்பேருரை**

மெய்கண்டதேவர் ஆதீனம் 21ஆவது ஆண்டு நிறைவு ஸ்ரீமத் ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகள் நினைவு சைவசித்தாந்தப் பேருரை மாநாடு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் 25ஆம் திகதி, திங்கட்கிழமை நடைபெறும்.

**தவறிவிட்டது**

பருத்தித்துறை மீன்சந்தைப் பகுதியில் 20ஆம்திகதி 12 மணியளவில் 4 திறப்புகளுடனான கோர்வை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் டாக்டர் ஏ பாலகிருஸ்ணன் ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறையில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும் (8112)

**கோழி வளர்ப்புத் தொழிலில் அனுபவம் உள்ளோர் தேவை**

எமது சங்கத்தினால் அமுல் படுத்தப்படவிருக்கும் கோழி வளர்ப்புத் திட்டத்திற்கு நீண்ட கால அனுபவமும், பயிற்சியும் உள்ளவர்கள் உடன் தேவையாக இருக்கிறது. எனவே மேற்குறிப்பிட்ட தகமை உடையவர்கள் 30.04-94 ஆம் திகதிக்குள் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

-பதில் பொதுமுகாமையாளர்.

201/1 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

புங். நயி. பல நோ கூ. சங்கம்.

(சி-9217)

# தபால் திணைக்கள மோசடி 34 ஊழியர்கள் கைது

### மேலும் பலருக்கு வலை விரிப்பு

(கொழும்பு)

தபால் திணைக்களத்தில் நடைபெற்ற தபால் மற்றும் பொதிகள் மோசடி தொடர்பாக கொழும்பு தபால் பரிவர்த்தன நிலையத்தையும், மற்றும் தபால் அலுவலகங்களையும் சேர்ந்த முப்பத்தி நான்கு தபால் ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தொண்ணூறு ஊழியர் தேடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விசேட இரகசிய பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது இவர்கள் தொடர்பாகத் தகவல் கிடைக்கப் பெற்றதாகவும் மேற்படி தேடப்படும் நபர்கள் கிடைக்கப்படும் சமயம் மேலும் பலர் தொடர்பாகத் தகவல்கள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்ப்பதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பாப்பரசர் ஆராதனைக்கு மூன்று இடங்கள் தெரிவு

(கொழும்பு)

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அடுத்த ஆண்டு இலங்கை விஜயம் மேற்கொள்ளும் போது அவர் ஆராதனை செய்வதற்கான இடத்தினை தெரிவு செய்வதற்கான கூட்டமொன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இதில் மூன்று இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள போது மேற்படி மூன்றில் பாதுகாப்பு தொடர்பாக வத்திக்கானின் இருந்து வரும் விஷேட பாதுகாப்பு தொடர்பாக ஆராயும் குழுவே இம் மூன்றில் ஒன்றை தெரிவு செய்யும், இலங்கையிலுள்ள சகல மறை மாவட்டங்களின் இரு பிரதிநிதிகள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும், காலி முகத்திடல் (கோல்பேஸ்), சுகததாச விளையாட்டு அரங்கு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பாராளுமன்ற எதிரே உள்ள மைதானம் போன்ற இடங்களே தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதே வேளை இவரின் வருகை தொடர்பாக ஒத்திகைகள், சமய நிகழ்ச்சிகள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவை வத்திகானுக்கு அனுப்பப்பட இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

மே மாத இறுதி அல்லது ஜூன் மாத ஆரம்பத்தில் வத்திகனில் இருந்து வரும் பாதுகாப்பு ஒருங்கமைப்புக்குழு இடங்களின் விஷேட பாதுகாப்பு தொடர்பாக ஆராயும் என மேலும் தெரிய வருகின்றது. (நி,ச)

O|L DAY CLASS

A BOON TO STUDENTS

முற்பிரிவு அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது

2-வது புதிய பிரிவு மே 02 முதல்

★ அனுமதிகளை உடனே பெற்று உங்கள் இடங்களை உறுதிப்படுத்துங்கள்.

★ வழமைபோல் இவ்வருடமும் இரு பிரிவுகள் பட்டுமே ஆரம்பிக்கப்படும்

★ கடந்த 21 வருட சாதனைகள் பல நிகழ்காலத்திற்கு சான்றாகும். (சி-9192)

DIPLOMA IN DATA PROCESSING AND BASIC PROGRAMMING

## கல்லுண்டாய் வெளியில் உவர் நிலப்பயிர்ச் செய்கை

(யாழ்ப்பாணம்)

அடுத்தபோகத்தில் கல்லுண்டாய் வெளியில் உவர் நிலப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளசண்டிலிப்பாய்உதவிஅரச அதிபர் பிரிவினர்நடவடிக்கை எடுத்துவருகின்றனர்

மானிப்பாயிற்கு அண்மையாகவுள்ள கல்லுண்டாய் வெளியில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு பயிர்ச்செய்கை நிலமாக மாற்றவும் பசும்புற்றரைகளை வளரச் செய்து நந்நிலமாக மாற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன

அத்துடன் இதற்கான அனுமதியையும் யாழ் செயலகம் மேற்படிஉதவிஅரசஅதிபர்பிரிவினருக்குவழங்கியுள்ளதாக தெரியவருகின்றது

மேலும் மேற்படி பகுதியில் வற்றாத நீர் ஊற்று ஒன்றும் காணப்படுவதாகவும் அந்நீர் ஊற்றில் இருந்தும் மேற்படி பகுதிகளுக்கு நீரை வழங்கி பயிர்ச்செய்கையை விஸ்தரிக்க முடியும் எனவும்யாழ்செயலகபதில் அரச அதிபர் தெரிவித்தார், (பா)

## பண்டிதர் குடியிருப்பில் மலேரியா கண்டுபிடிப்பு

# ஐஸ் கட்டித் தொழிற்சாலை அமைப்பதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 'ஐஸ்' கட்டி தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்குஇறால் விற்பனை செய்யும் நிலையம் ஒன்று முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக தெரிய வருகின்றது.

தற்போது இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எவ்வளவு ஐஸ் கட்டிகளை உற்பத்தி செய்வது, எந்த அடிப்படையில் தென்பகுதிக்கு அனுப்புவது தொடர்பாக இந் நிறுவனம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் இதற்கான ஒழுங்குகளைமேற்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு அந்த நிறுவன பிரதிநிதிகள் கொழும்பு சென்றிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

யாழ் குடாநாட்டில் பிடிக்கப்படும் பெரிய இறால்களை மேற்படி நிறுவனம் அனுப்பும் சாத்தியம் இருப்பதாகவும், தற்போதுள்ள சூழ்நிலையில் ஒரு கிலோ இறாலை இவ்வாறு விற்பனைக்கு அனுப்புவதற்கான செலவு சுமார் ஐம்பது ரூபா மட்டில் ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சிறிய இறால்களை இவ்வாறு அனுப்புவதினால் விற்பனைச்செலவு சந்தைச்செலவுக்கு ஈடுசெய்ய முடியாத நிலையில் இருப்பதால் இவ்வாறு தென்பகுதிக்கு அனுப்ப முடியாது என அந் நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இம் முயற்சி வெற்றியளித்தால் இறால் பிடிக்கும் தொழிலாளர்க்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்றும் இதனைத் தொடர்ந்து இறால் உற்பத்தியை மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி) (க)

## கைதடி த. க. பாடசாலை மீள திறக்க நடவடிக்கை

(நமது நிருபர்)

கடந்த பல வருடங்களாக மூடப்பட்டுக்கிடக்கும் கைதடி மகா வித்தியாலயம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கல்வித் திணைக்கள. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1986ஆம் ஆண்டளவில் மூடப்பட்ட இக் கல்லூரியை கைதடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரில் மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாகக் கல்வி வலயம் - I இன் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்தார்.

இதனை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து அவர் விளக்குகையில் கைதடி ரயர் அகதிகள் முகாமில் தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 200 பிள்ளைகள் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாகப் பாடசாலைகளுக்குச் செல்லாது இருப்பதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் இதனாலேயே தான் இப் பாடசாலையை மீண்டும் ஆரம்பித்து இம் மாணவர்கள் அங்கு கல்வி கற்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

## வெண்கலச் சிலை பாசையூரில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாசையூர் சந்தைக்கு முன்பாக கிடங்கொன்று வெட்டப்பட்டபோது அவ்விடத்தில் வெண்கல சுருவம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வெண்கலத்தினால்செய்யப்பட்டுள்ள இச்சுருவம் கிடங்கு தோண்டும் போது சிறுசேதத்திற்கு உள்ளானது இச்சுருவம் தற்போது பாசையூர் அந்தோனியார் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது இச்சுருவம் பற்றி யாழ் பல்கலைக் கழகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## கண் சிகிச்சை முகாம்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்

## விதைநெல் தேவை

### காலபோகம் 1994 / 95

மேற்படி காலபோகத்திற்குத் தேவையான நல் விளைச்சல் தரக்கூடிய திருந்திய நெல் இனங்களை வெளிமாவட்டங்களில் இருந்து பெறவேண்டி இருப்பதனால், நெற்செய்கையில் ஈடுபடவிருக்கும் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான திருந்திய நெல் இனங்களான பிஜி - 500, பிடபிள்யூ 351, பிஜி 350, ஏரி402, ஏரி353, ஆகியவற்றின் தேவையைத் தத்தமது பகுதிக் கமநலசேவை நிலையங்களில் உடனடியாகப் பதிவுசெய்து, மேற்படி நெல் இனங்களைத் தருவிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆ. சிவசுவாமி
சிரேஷ்ட கமநலசேவை உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாண மவட்டம்.

கமநலசேவைகள் திணைக்களம்,
யாழ்ப்பாணம் 1994-04 22 (சி 9228)



(7 மாதங்கள்)

ஆரம்பம்: 25 - 04 - 94 காலை 9 - 00

பல்கலைக் கழகம் பிரவேசிக்க இருக்கும் மாணவர்களுக்கு — (Computer Science, Management, B, Com.) அடிப்படை அறிவுடன் கூடிய பாட போதனைகள், தமிழ் விளக்கத்துடன் அனுபவமும், ஆற்றலும் உடைய ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

தொழில் புரிவோர் பிரத்தியேக வகுப்புக்கள் ஒழுங்கு செய்ய முடியும்;

இலவசக் கல்வி பெற விரும்புபவர்கள் முன் கூட்டியே பதிவு செய்திருத்தல் வேண்டும்,

உங்கள் கணணி அறிவை வளர்த்திட

**Computer Science Academy**

Navalady Lane, Thirunelvely.

(சி-9232)


(யாழ்ப்பாணம்)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் கடந்த 10, 11-ஆம் திகதிகளில் விடுதலைப் புலிகளின் நடமாடும் வைத்திய சேவையினரால் நடத்தப்பட்ட இரத்த பரிசோதனையில் 85 பேருக்கு மலேரியா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இவர்களில் 14 பேர் மூளை மலேரியாவால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். பத்து வயதுக்கு உட்பட்ட ஐந்து பேர் இதில் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

17, 18ஆம் திகதிகளில் பண்டிதர் குடியிருப்புக்கு விஜயம் செய்த நடமாடும் வைத்திய சேவையினர் அங்குள்ள 342 பேரைப் பரிசோதித்தனர், பரிசோதனையின்போது வயிற்றுளைவு நோயாளர் 15 பேரும், வயிற்றோட்ட நோயாளர் 5 பேரும், சொறி சிரங்கு நோயாளர் 4 பேரும் இனங் காணப்பட்டுள்ளனர்,

அத்துடன் 115 பேருக்கு இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது, இதில் 86 பேர் மலேரியா நோயாளரராகவும், 12 பேர் மூளை மலேரியா நோய் நிலையில் உள்ளவர்களாகவும் காணப்பட்டுள்ளனர்.

## ஆங்கில தினம்

புனித பிரான்சிஸ் சேவியர் குருமடத்தின் கார்டினல் நியூமன் ஆங்கில அக்கடமியின் ஆங்கில தினவிழா எதிர்வரும் வியாழக்கிழமையன்று குருமடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் என். பாலகிருஷ்ணனும், அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாக இவ்விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

தில் ... சம்பந்தமாக பதிவு செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆச்சிரமத்தில் கூடுமாறு சுவாமி சித்ருபானந்தா அவர்கள் அறிவித்துள்ளார். சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் கண் சிகிச்சை முகாம் ஒன்றும் நடைபெறவுள்ளது. (யோ)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாண மத்தியகல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் அண்மையில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் தலைவராக டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறனும், செயலாளராக என். ராஜதேவனும் பொருளாளராக ஆர். ராஜாராமும் தெரிவு செய்யப்பட்டனர்.


நம்பிக்கை! நாணயம்! உத்தரவாதம்! நியாயவிலை!

- சகல கைக்கடிகார வகைகள்
- எலெக்றோனிக் மின்சாரப்பொருட்கள்
- மணிக்கூட்டு பற்றரிகள்

இவற்றின் விற்பனை முன்னோடி

- கைக்கடிகார வகைகள்
- எலெக்றோனிக் பொருட்கள்

திருத்துவதில் ஓர் சிறப்புத் தேர்ச்சி

# மின்வளம்

இல 81, லெப். கேணல் சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்

உள்ளங்களை மகிழ்வூட்டும்

- விடுதலைப் பாடல்களையும்
- சினிமா திரைப்படப் பாடல்களையும்

சிறந்த முறையில்
COMPACT DISC ல்
பதிவு செய்து உடனுக்குடன் பெற்றிடுங்கள்

மணிக்கூட்டு பற்றரிகள் கழிவு விலையில் வியாபாரிகளுக்கு வழங்கப்படும்.

(சி-9229)

# ஈழத் தமிழிலக்கிய மாநாடு சென்னையில் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)
ஈழத்தின் நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியை உலகமே அறியும் வண்ணம் தமிழகத்தின் தலைநகரான சென்னையில் மூன்று நாட்கள் ஈழத்து தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றை நடாத்த நடவடிக்கை எடுப்பேன். இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளிவரும் ''சுபமங்களா'' இதழின் ஆசிரியரும், பிரபல நாடக ஆசிரியருமான கோமல் சுவாமிநாதன் சென்னைக்குப் புறப்படுவதற்கு முன்னர் கொழும்பில் தெரிவித்தார்,

அவர் இது பற்றி மேலும் கூறுகையில், சுபமங்களா சஞ்சிகையின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டுகளில் நாடகவிழா, இசை விழா போன்றவை நடத்தப்பட்டுள்ளன. இது போன்று ஈழத்து தமிழிலக்கிய மாநாடும் சென்னையில் நடத்தப்படும்.

ஈழத்து எழுத்தாளர்கள், தமிழக எழுத்தாளர்களையும் அவர்களது படைப்புக்களையும் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு தமிழகத்தில் உள்ளவர்கள் இங்குள்ளவர்களைப் பற்றி அறிந்து வைத்திருக்கவில்லை என்ற குற்ற உணர்வுடனேயே தமிழகம் செல்கிறேன். சுபமங்களா மூலம், ஈழத்து சிறப்பிதழ் ஒன்றை வெளியிடவும், ஈழத்து சிறுகதைப் போட்டி நடத்தவும் ஏற்பாடுகள் செய்வேன்.

தமிழ் வளர்ச்சிக் கழகம் பேன்ற அரசு நிறுவனங்களும், இலக்கிய சிந்தனை போன்ற மற்ற அமைப்புக்களும் ஈழத்து தமிழ் எழுத்தாளர்களின் நூல்களுக்குப் பரிசளிக்கும்படி செய்வதற்கும் முயற்சிப்பேன்.

இலக்கிய பரிவர்த்தனை ஒரு வழிப் பாதையாக இருக்கின்றது. இதனை இரு வழிப் பாதையாக்க வேண்டும். மனிதாபிமானம் கொண்ட ஓர் இலக்கியத் தொடர்பை இரு சாரார்களுக்கும் இடையே ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் வைத்து மகாபொல வழங்க முயற்சி

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில்கள் வழங்கும் வைபவத்தினை சென்றமுறை போல் யாழ்ப்பாணத்தில் நடாத்த யாழ், அரச அதிபர் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

எனவே இம்முறை கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்லும் சமயம் யாழ், அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் இது தொடர்பாக உயர் கல்வி அமைச்சுடன் கலந்தாலோசனை நடாத்தவுள்ளார்:

இவ்வைபவம் எதிர்வரும் மே மாதம் ஏழாம் திகதி இலங்கை முழுவதும் நடைபெறவுள்ளதாக தெரியவருகின்றது. (ப ) (தி)

## கொக்கட்டிச்சோலையில் ரெலோவினர் பணம்பறிப்பு

(யாழ்ப்பாணம்)
மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் ரெலோ தேசவிரோதிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது

நெல் அறுவடையை விற்பனை செய்த விவசாயிகளிடமிருந்து ரெலோ தேசவிரோதிகள் பயமுறுத்திப் பணம் பறித்துள்ளனர். தமது ஏழ்மை நிலையைக் கூறிப் பணம் தர மறுத்த விவசாயிகளைக் கடுமையாகத் தாக்கியும் உள்ளனர். சிலரைக் கடத்திச் சென்று பணம் தரும்படியும் அச்சுறுத்தியுள்ளனர்.

## மதவைபவங்களில் கலந்து கொள்ள ஜனாதிபதி, பிரதமருக்கு திருமதி ஹேமா அழைப்பு

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் நினைவு தினநிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகியோருக்கும் மற்றும் அமைச்சர்களுக்கும் திருமதி ஹேமா பிரேமதாசா அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர் வரும் 30ஆம் திகதி இரவு கொழும்பு சுசரித்த மண்டபத்தில் நடைபெறஇருக்கும் மதவைபவங்களில் கலந்து கொள்ளுமாறே ஹேமா பிரேமதாசா அழைப்பு விடுத்துள்ளதாக தெரியவருகிறது.

## சு. கட்சியின் பா. உக்கள் விரைவில் கட்சி மாறலாம்

(கொழும்பு)
சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிலர் மிக விரைவில் அக் கட்சியில் இருந்து விலகி ஐக்கியதேசிய கட்சியுடன் இணையப்போவதான தகவல்கள் கிடைத்துள்ளதாக சுதந்திரக்கட்சி பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ளுமன்ற உறுப்பினர்களே மேற்படி கட்சி தாவல் இருப்பதாகவும் எனவே இவ் உறுப்பினர்களின் இடத்திற்கு புதிய உறுப்பினர்களை கட்சி அமைப்பாளர்கள் நியமிப்பது தொடர்பான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக

## புதிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
யாழ். பூம்புகார் தமிழ்க் கலவன் பாடசாலை என்கின்ற பெயரில் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரியாலை கிழக்கில் அமைந்துள்ள மேற்படி பாடசாலை வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் சென்ற மாதம் 1ஆம் திகதி தொடக்கம் செயற்படுகின்றது.

மேலும் இப்பாடசாலையின் அதிபராக ச. சண்முகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். [பா]

## மீள விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணக் கல்வி வலயம் ஒன்றில் முதன்மை ஆசிரியர் பதவிக்காக ஏற்கனவே பெறப்பட்ட விண்ணப்பங்கள் ரத்துச் செய்யப்பட்டு இருப்பதாகவும், தற்போது காணப்படும் 47 வெற்றிடங்களுக்கும் மீள விண்ணப்பிக்கும் படியும் யாழ்ப்பாண கல்வித் திணைக்களம் தகுதியுடைய ஆசிரியர்களைக் கோரியுள்ளது. வெற்றிட விபரங்களும், மாதிரி விண்ணப்ப படிவங்களும் கோட்ட கல்வி அலுவலகத்தில் பார்வையிடலாமென மேலும் கூறப்பட்டுள்ளது.

## பெண்கள் விழிப்படைய பூபதியின் ஈகம் வழிகாட்டி

(மன்னார்)
அன்னையின் தியாகம் பெண்களை விழிப்படையச் செய்தது மட்டுமன்றி, பெண்களுக்கென்றொரு வரலாற்றையும் எழுதச் செய்துள்ளது. இவ்வாறு மன்னார் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி வளர்மதி தெரிவித்தார்

மன்னார், நானாட்டான் பகுதியில் அன்னை பூபதியின் ஆறாவது ஆண்டு நிறைவு தினம் தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார். முன்னதாக அன்னை பூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பாண்ட் வாத்திய இசையுடன் மக்களாலும், போராளிகளாலும் எடுத்து வரப்பட்டது, மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி செபமாலை, மாவட்ட தளபதி சீலன் ஆகியோர் ஈகச் சுடரை ஏற்றிவைத்த பின், தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மகளிர் அமைப்பு சார்பில் பேசிய சுதா தமதுரையின் போது அன்னை பூபதி எமது மக்களின் ஒட்டுமொத்தமான வளர்ச்சியையும், இலட்சியப் பற்றையும் உலகிற்கும், இந்திய அரசுக்கும் எடுத்துக் காட்டியுள்ளார், எனத் தெரிவித்தார், மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் நந்தகுமாரும் இங்கு உரையாற்றினார்,

பொது அறிவுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது, தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது

## மேலும் இருகட்ட உலர் உணவு விநியோகம்

யாழ் கச்சேரி புனர்வாழ்வுப்பகுதி இடம் பெயர்ந்தவ

வழங்குவதற்கு ப. நோ. கூ. சங்கங்களைப்பணித்துள்ளது

# பாப்பரசர் கொழும்பு விஜயத்திற்கு பௌத்த மத பீடங்கள் எதிர்ப்பு

(கொழும்பு)
பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் விஜயத்திற்கு பௌத்த பீடாதிபதிகளின் மறைமுகமான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது

இவரின் வருகை பௌத்த சிங்கள நாட்டிற்கு அவ்வளவு உசிதமனதாக இல்லையென்றும் இவரின் வருகையைத் தொடர்ந்து பல பௌத்தர்கள் மதம் மாற்றம் அடையலாம் என்றும் ஜனாதிபதிக்கும்பௌத்தகலாசார அமைச்சுக்கும் பௌத்த பீடங்களான அஸ்கிரிய மல்வத்தை பீடங்களை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளன. எனவே அரசாங்க செய்தி தொடர்பு சாதனங்கள் இது தொடர்பாக செய்திகளை வெளியிடும் போது மிக அவதானமாக வெளியிடுமாறு அரசாங்கம் நிர்ப்பந்திக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன

இப்பௌத்த பீடாதிபதிகளின் எதிர்ப்பை சமாளிக்கும் வகையில் இப்பீடங்களைச் சேர்ந்த பீடாதிபதிகளுக்கு முதல் அழைப்பு அனுப்புவதற்கும் விஜயம் தொடர்பாக ஆலோசனை பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது (நி) (க)

# பி. பி. சி புதிய செய்தியாளராக ஜோர்ஜ் ஆர்னி நியமனம்

பி.பி.சி உலக சேவை ஜோர்ஜ் ஆர்னி என்பவரை கொழும்புக்கான செய்தி சேகரிப்பாளராக நியமித்துள்ளது. 1982ஆம் ஆண்டில் கிழக்கு அயன் வலயப் பகுதிக்கான செய்திச் சேகரிப்பாளராக பி பி சி.யில் சேர்ந்து கொண்ட இவர் 1986இல் இஸ்லாமாபாத்திற்குநியமனம் பெற்றார் அங்கிருந்த போது ஆப்கானிஸ்தான் பற்றிய நூல் ஒன்றை எழுதிய அவர் லண்டன் கார்டியன் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராகவும் செயற்பட்டார் 1988இல் லண்டன் திரும்பியபோது தற்கால நிகழ்ச்சிகள் பற்றி செய்தித் தொகுப்பாளராகவும் பதவி உயர்த்தப்பட்டார் 1991இல் உருது மொழிக்கான பி பி சி சேவையின் பொறுப்பாளராகவும் பணியாற்றிய இவர் 1992 ஆம் ஆண்டில் தென் ஆசிய சேவைக்கான செய்தியாளராகவும் பணியாற்றினார் அப்போது 1993ஆம் ஆண்டில் பாகிஸ்தானில் நடந்த தேர்தல்களைப் பற்றி உடனுக்குடன் அறிவித்து புகழ் பெற்றிருந்தார். இவர் 1990 ஆம்ஆண்டில் சிறிது காலம் தாய்லாந்தில் விவசாயியாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது பி பி.சியின் உலக சேவையின் தற்போதைய கொழும்பு முகவரானசியாகோநூசு விரைவில் லண்டன் திரும்பவுள்ளார்.

புதிய முகவராக கொழும்பு வந்திருக்கும் ஜோர்ஜ் ஆர்னி கூறுகையில் இனப் பிரச்சினைகள், பொருளாதார நவீனமயமாக்கல், மதப்பூசல்கள் மற்றும் ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகள் என்பவை சிறிலங்கவிற்கு மட்டுமே உரிய பிரச்சினையல்ல. துணைக்கண்டப்பகுதியில் பல இடங்களுக்கும்சென்று வந்துள்ளேன் செய்திகள் சேகரித்து ஒலிபரப்பியுள்ளேன். இப்பகுதிகளில் வாழ்ந்தும் இருக்கிறேன் கடந்த பல ஆண்டுகளாக.கொழும்பிற்கான எனது நியமனம் மூலம் சிறிலங்காவும் அதன் அண்டை நாடுகளும் எதிர்நோக்கும் இத்தகைய பிரச்சினைகளின் ஒற்றுமை வேற்றுமைகள் பற்றி வெளிக் கொணர முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

## கடன் கட்ட முடியவில்லை 12விவசாயிகள் தற்கொலை

(கொழும்பு)
சிறிலங்கா அரசிடம் இருந்து விவசாயக்கடன் பெற்றுக் கொண்ட சுமார் 12இற்கு மேற்பட்ட விவசாயிகள் அக்கடனைச் செலுத்த முடியாமல் தற்கொலைசெய்து கொண்டுள்ளனர்.

இச்சம்பவங்கள் பொலநறுவை மாவட்டத்தில் நடைபெற்று வருவதாக விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் பலரும் இவ்வாறு கடன் தொல்லைகளினால் அவதிப்படுகின்றனர். அத்துடன் விவசாயிகளுககு வழங்கப்பட்டுள்ள கடனை அறவிடாது ரத்துச் செய்ய வேண்டும் என கோரி விவசாயிகள் பலர் அண்மையில் பொலநறுவையில் ஒருநாள் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டுள்ளனர்.

## வல்வெட்டித்துறையில் வர்த்தகத் திணைக்களம் திறந்து வைக்க ஏற்பாடு

(பருத்தித்துறை)
வல்வெட்டித்துறையில் வர்த்தகத்திணைக்கள கிளையொன்று அடுத்த மாதம் நடு

களக்கிளை வல்வெட்டித்துறை நகரப்பகுதியில் அமையும் என்றும் இதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்திய

## மருந்தாளர்களுக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)
இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமை புரியும் மருந்தாளர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று அண்மையில் யாழ் லங்கா சித்தஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இப் பயிற்சி நெறியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சித்த ஆயுர்வேத வைத்திய பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 35ற்கு மேற்பட்ட மருந்தகங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து பயிற்சி பெற்றனர். (88)

## கல்விச்சுற்றுலா

யாழ்ப்பாணம் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய அதிபர் தலைமையில் ஆசி

தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணம், மேல் மாகாணம், தென் மாகாணம் ஆகியவற்றை சார்ந்த பாரா

களை திறப்போது மேற் கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வுப்பகுதி இடம் பெயர்ந்தவர்களுக்கு மேலும் இரு கட்ட இலவச உலர் உணவு விநியோகத்தை அடிக்கட்டையில்

சங்கங்களபணித்துள்ளது இது 13 பி. புள்ளிக்கான விநியோகமாகும். இதற்கு அரிசி, மாவு, சீனி, மல்லி, தீப்பெட்டி போன்ற பொருட்கள் வழங்கப்படவுள்ளனஎன தெரிவிக்கப்படுகிறது (88)

## விளையாட்டுப் போட்டி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வலி. வடக்குப் பிரிவின் இடம் பெயர்ந்தோர் முகாம்களின் பாலர்பாடசாலைகளுக்கான விளையாட்டுப்போட்டி கடந்த திங்கட் கிழமை மாலை 3 மணியளவில் மல்லாகம் பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக சமூக நற்பணிப்பிரிவு இணைப்பாளர் திரு. கா. சிவா தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்ச்சிக்கு மல்லாகம் சிற்றூர்ப்பொறுப்பாளர் திரு நளின் அவர்களும், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனை பதவி நிலை உதவியாளர் திரு. குலசிங்கம் அவர்களும் மங்களவிளக்கை ஏற்றி வைக்க, திரு மதிவண்ணன் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். அதனைத்தொடர்ந்து, பாலர்பாடசாலைக்கானகொடிகளை ஆசிரியர்கள் ஏற்றிவைத்து விளையாட்டுக்கள் ஆரம்பமாகின. முடிவில் சிறப்புரைகளை நளின் அவர்களும் செஞ்சிலுவைச்சங்க வலி.வடக்குஇணைப்பாளர் செல்வரத்தினமும் நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து பரிசில்களும் வழங்கப்பட்டன.

## வைத்திய கலசம் வெளியீடு

வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தனின் வைத்திய கலசம் நூல் வெளியீட்டுவிழா 25ஆம் திகதி திங்கள் கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் பருத்தித்துறைவட இந்து மகளிர் கல்லூரியில்நடைபெற உள்ளது.

த்தகத்திணைக்கள கிளையொன்று அடுத்த மாதம் நடுப்பகுதியில் திறந்து வைக்கப் படவுள்ளதாக யாழ். வர்த்தகத்திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறைமக்களின் கோரிக்கைகளையடுத்து யாழ் வர்த்தகத் திணைக்களத்தால் திறந்து வைக்கப்படவுள்ள இவ்வர்த்தகத்திணைக்

யும் என்றும் இதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் ஒன்பது வர்த்தகத்திணைக்களக் கிளைகள் இயங்குவதாகவும் வல்வெட்டித்துறைக்கிளை பத்தாவது கிளையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது(25)

லய அதிபர் தலைமையில் ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் அடங்கிய குழுவொன்று கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டது. இச்சுற்றுலாவின் போது மாவீரர் துயிலும் இல்லங்கள், புனித இடங்கள், விவசாயப் பண்ணைகள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற இடங்களைச் சுற்றிப் பார்வையிட்டனர்.


# கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்

1-ம் வருட நிறைவு 14 வருடங்கள் நிறைவு



இராயப்பு குருசுமுத்து குருசுமுத்து அன்னம்மா

17 12 1909 > தோற்றம் < 01-08 1918

25-01-1993 > மறைவு: < 24-04-1980

திரிபோல எரிந்துருகும் தியாகிகளாய் வாழ்ந்தீர் - உங்கள்
பிரிவினிலே கலங்குகின்றோம் அன்பர்கள் நாமும்
கருணை மிக்க தேவனிடம் அடைக்கலம் புகுந்திரோ
ஆண்டுகள் ஒன்றென்ன பதினான்கு என்ன
எம் கண்ணீரால் தூய்மை பெறும் உமது கல்லறைகள்
நாம் மடியும்வரை நீங்கள் எமது இதய அறையில்.........

உங்களின் பிரிவால் துன்புறும்,

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(சி-9235)



# இன்று (23 4-94) சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில்

நினைவில் நிலைத்து நிற்கும் இனிக்கும் நிகழ்வு

# செந்தமிழ் பாட்டு 11

## விடியலைத் தேடும் பறவைகள்

ஒலிப்பதிவு நாடா

இசையமைப்பாளர்,

யாழோசை கண்ணனின்

இசை நெறியில் நடைபெறும் மாபெரும்

## ★ இன்னிசை நிகழ்வு ★

இசைத் துறையில் பயிற்சிபெற்று பட்டம்பெற்ற பல பாடகர்கள், பாடகிகள் இணைந்து பல்சுவைப் பாடல்களை வழங்கவுள்ளனர்

பிரபல இசையமைப்பாளர்கள்

இளையராஜா, தேவா, மரகதமணி

ஆகியோரின் தேர்ந்த இசை வண்ணங்களும்

கிற்றார், புல்லாங்குழல், ஓகன் இசையும் நடைபெறவுள்ளன.

**நாளை (ஏப்பிரல் 24)**

யாழ் கைலாசபதி கலையரங்கம்.

(ஓ-9240)

நேரம் மாலை 3 மணி.

சிந்தனைக்கு

தாராளப் பண்புஎன்று தோன்றுவது, பலவேளைகளில் மாறுவேடம் பூண்ட சுயநலன்தான்; பெரிய நலனை அடைய அது சிறிய நலனைவிட்டுக் கொடுக்கிறது.
— லாரோஷ்புக்கோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2028
தபால் பெட்டி எண் - 05

## தீர்விற்கான அடிப்படை என்ன?

இன்றைய நிலையில் ஒப்பீட்டு அடிப்படையில்ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியை விட சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக முன்னேற்ற மான சில கருத்துக்களை தெரிவித்து வருகின்றது.

இறுதியாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்க உலகவங் கியின் தென்னாசிய பிராந்திய வேலைத் திட்டப் பிரி வின் இயக்குனர் போல் ஐசனுக்கு தெரிவித்த கருத் துக்கள் குறிப்பிடத்தக்கவை. இதில் வடக்கு - கிழக்கில் உள்ளது இனப்பிரச்சினை என்றும் இதற்கு தாம் ஆட்சிக்கு வந்தால் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண் போம் எனவும் அவர் குறிப்பிட்டமை சுட்டிக் காட் டத்தக்கவையாகும்.

ஆட்சியில் உள்ள ஐ. தே. க. வடக்கு - கிழக்கில் நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டம் பற்றி ஒரு குழப்பமான கருத்தையே வெளியிட்டு வருகின்றது. இதில், ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வடக்கு - கிழக் கில் நிகழ்வது இனப்பிரச்சினையல்ல, பயங்கரவாதப் பிரச்சினையே எனத் தொடர்ந்து கூறி வருகின்றார். கடந்த வருடம் அவர் பதவி ஏற்றதில் இருந்து இத னைத் தொடர்ந்து தீவிரமாக வலியுறுத்தி வந்தார். ஆனால் தென் மாகாண சபை தேர்தலின் பின் இது குறித்து அவர் உரத்தும் அடிக்கடியும் பேசாது விட்டா லும் தனது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை. அதை வெளிப்படையாகத் தெரிவித்தும் உள்ளார்.

இதேவேளை ஐ தே. க வில் உள்ள சிலர் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனத் தெரிவிக்கின்றபோதும், ஜனாதிபதி டி பி. விஜே துங்காவின் குரலுக்கு மேலாக ஒலிப்பதாகத் தெரிய வில்லை அவர்கள் அடக்கியே வாசிக்கின்றனர்.

இந்நிலையில், வடக்கு - கிழக்கில் இருப்பது இனப் பிரச்சினை என்பதையும், அது ஒரு தேசியப் பிரச் சினை என்பதையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ ஏற்றுக் கொண்டிருப்பது முக்கி யமானது அதிலும் இனவாத அரசியலே நடத்தி பழகி விட்ட நிலையில், ஒரு தேர்தல் ஆண்டில் தமிழர் பிரச்

# தம் கலங்கரை விளக்கமென வை. கோவிடம் இளைஞர் நிறையவே எதிர்பார்க்கின்றனர்

காங்கிரஸ் கட்சிக்கும், அண்ணா தி. மு. கழகத்திற்கும் மீண்டும் உடன்படு உண்டா? இல்லையா? என்பது கடந்த ஓர் ஆண்டு காலமாக தமிழக அரசியல் வானில் நடந்து கொண்டிருக்கும் பட்டிமன்றம்.

அண்ணா தி. மு. கழகத்துடன் உறவு கொள்ள காங்கிரஸ் தலைமை முயற்சிப்பதாக சில நாளேடுகள் தங்கள் ஆசைகளைச் செய்திகளாக்கிக் கொண்டிருந்தன.

தமிழக முதல்வர் ஜெயலலிதா டில்லி செல்கிறார் என்று செய்தி வந்தால் போதும், காங்கிரஸ் உறவைப் புதுப்பிக்கத்தான் அவர் தலை நகருக்குப் பறக்கிறார். என்று இன்னொரு தரப்பில் செய்திகள் கிளம்பும்.

அனுமான் வால்போல நீண்டு கொண்டே சென்ற இந்த உடன்பாடு, உறவுப் பிரச்சினைக்குத் தமிழக முதல்வர் ஜெயலலிதா இறுதியாக ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

காங்கிரஸ் கட்சியோடு இனி தேர்தல் உறவு என்பது ஒரு நாளும் இல்லை. அடுத்து வரும் மயிலை பெருந்துறை சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல்களில் அந்தக் கட்சிக்கு டெபாசிட் கூடக் கிடைக்க விட மாட்டேன் என்று சட்டப் பேரவையில் கொள்கைப் பிரகடனமே செய்து விட்டார்.

பழனி நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தல் பிரசாரத்தின் போது அவர் என்ன சொன்னார் என்பதையும் இங்கு நினைவு கூர வேண்டும்.

'காங்கிரஸ்கட்சி தமிழக மக்களுக்கு துரோகம் செய்து விட்டது. எனவே, அந்தக் கட்சியுடன் எந்த நாளும் உறவு கொள்ள மாட்டோம்' என்று தெளிவாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நரசிம்மராவ் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தது. பாரதீய ஜனதாவோடு அந்தத்தீர்மானத்திற்கு ஆதரவாக அண்ணா தி. மு. க வாக்களித்து காங்கிரஸ் உறவைக் கத்தரித்துக் கொண்டது.

இழக்கச் செய்வதே எங்கள் இலட்சியம் என்று அவர் அறிவித்த பின்னரும் காங்கிரஸ் தலைமை ஏன் இன்னும் மோன நிலையில் மௌனத்தில் இருக்கிறது?

இனி, அண்ணா தி மு. க, உறவு தேவையில்லை என்று மூப்பனார் சொன்னால் போதுமா? வாழப்பாடி அறிவித்தால் போதுமா? காங்கிரஸ் தலைமை சொல்லியாக வேண்டும்.

அண்டை மாநில சட்டமன்றத்தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி தோற்றிருக்கிறது ஆட்சி பீடத்தை இழந்திருக்கிறது ஆனால், மீண்டும் ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது தமிழகத்திலே 1967-ம் ஆண்டு கோட்டையை கோட்டை விட்ட காங்கிரஸ் மீண்டும் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை என்ன காரணம்? தமிழகத்திலிருந்து இருபது, முப்பது எம். பி சீட்டு கிடைத்தால் போதும் காங்கிரஸ் தலைமைக்கு ஜென்ம சாபல்யம். தமிழக காங்கிரஸ் இருந்தாலென்ன செத்தாலென்ன?

பத்து ஆண்டுகளாக எம். ஜி. ஆர். ஒரு ராஜதந்திரத்தைக் கையாண்டார். மைய அரசோடு நல்லுறவு. தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் அப்படி ஒரு கட்சி இருப்பதாகவே அவர் கருதியதில்லை. அந்தக் கட்சியோடு மேதலுக்குப் போகவும் இல்லை. விளைவு என்ன? நூற்றாண்டு கண்ட கரை பழுத்த முதியவரைப் போல் தமிழ் நாடு காங்கிரஸ் கூனிக்குறுகி முடங்கியிருந்தது

ஆனால் எம். ஜி. ஆர். மறைவிற்குப் பின்னர் அந்த நிலை மாறியது. 1989-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என்று மூப்பனார் அறிவித்தார். அதனால் இருபத்தி இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் காங்கிரஸ் கட்சிக்கு உயிர் வந்தது மூப்பனாரின் முடிவை ராஜீவ் காந்தியும் ஏற்றுக் கொண்டார் தனித்து நின்ற காங்கிரஸ் 26 தொகுதிகளில் வெற்றி பெற்றது மேலும் 27 தொகுதிகளில் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தது.

அன்றைக்குக் காங்கிரஸ் கட்சி எடுத்த அதே நிலை நீடித்திருந்தால் கடந்த தேர்

இப்போது கிடைக்கவில்லை. இதனை பழனி, வேட சந்தூர் ஒட்டன் சத்திரம் சட்டமன்றத் தொகுதிகளிலேயே பார்த்தோம்.

ஏதோ இனம் புரியாத ஓர் அதிருப்தி மக்கள் மத்தியில் பரவி வருகிறது. அந்த அதிருப்தி பழனி நாடாளுமன்றத் தொகுதியில் அண்ணா தி. மு. கழகத்தின் அடித்தளத்தையே சற்று அசைத்து விட்டது என்பதுதான் உண்மை தொடர்ந்து அந்த கழகத்திற்கு வாக்களிக்கின்ற அடித்தள மக்களில் ஒரு பகுதியினர் இம்முறை வாக்களிக்கவில்லை அதனைப் பற்றி இன்றுவரை அண்ணா தி மு. கழகமும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை அன்றைக்குத் தென்பட்ட அதிருப்தி இன்றைக்கு வளர்ந்து வருகிறது என்பதுதான் இன்னொரு உண்மையாகும்.

எனவே, காங்கிரஸ் மேலிடம் இனியும் தமது தமிழகத் தொண்டர்களைத் தவிக்க விடாது தமிழக மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தாது இது தான் எங்கள் வழிஎன்று தெளிவாகச்சொல்லியாகவேண்டும்.

நாடாளுமன்றத்தில் இருபது சீட்டுகளாவது தேவை யென்றால், காங்கிரஸ் கட்சிஅதற்கு ஒரு சவாரிக்குதிரையைத்தேர்ந்தெடுத்துத்தான் ஆக வேண்டும்.

தமிழகத்தில் தம்மைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய இன்னொருஇயக்கம். வை. கோபாலசாமியின் தி. மு. க வாகும். சில மாதங்களுக்கு முன்னர் அந்த அமைப்பு உருவாகிய போது மக்களிடம் பெரிய எதிர்பார்ப்புகள். குறிப்பாக, அந்த இயக்கத்திற்கு அப்பால் உள்ள இளைஞர்களும் வை. கோ. வை நம்பிக்கை நட்சத்திரமாகக் கருதினார்கள், மாபெரும் புரட்சிக்கு அவர் வித்தூன்றப் போகிறார் என்றும் நம்பினர். ஆனால், அந்த நம்பிக்கை இற்றுப் போய் விடவில்லை. என்றாலும் வடிந்துகொண்டே வருகிறது. என்ன காரணம்?

தமிழக மக்கள் ஓர் அரசியல் மாற்றத்தை விரும்புகிறார்கள் அந்த மாற்றத்திற்குவை. கோ. ஒரு கலங்கரை விளக்காக ஒளி வீசுவார் என்றும்எதிர்பார்க்கிறார்கள். ஆனால், கலங்கரை விளக்கு முழுமையாக சுழல ஆரம்பிக்கவில்லை.

கால சமுதாயக் கோரிக்கைகளை, மக்கள் பிரச்சினைகளை முன்னிறுத்தி இயக்கங்கள் நடத்தலாம். இல்லையெனில் அண்ணா தி மு. கழக அணியில் காங்கிரஸ் ஏற்படுத்தும் வெற்றிடத்தை நிரம்பித் தோழமைக் கட்சியாக செயற்படலாம்.

இந்த இரண்டாவது யோசனைக்குத் தான் இரண்டாம் அணித் தலைவர்களிடையே ஆதரவு என்கிறார்கள். இனி மேல் போராட்டம், சிறை இயக்க வளர்ச்சி என்பதை விட சுகமான அரசியலை சுலபமாக நடத்தி விட்டுச் செல்லலாம் என்று அவர்கள் கருதக் கூடும். ஆனால், தொண்டர்களுக்கு இந்தக் கருத்தில் எள்ளளவும் உடன்பாடு இல்லை. அந்தத் தொண்டர்கள் இந்த இரண்டாம் அணி மாவட்டத் தலைவர்களுக்காக இந்த இயக்கத்திற்கு வந்தவர்கள் அல்ல. அவர்கள் வை. கோவை மாபெரும் புரட்சிக்காரராக, தூய்மையான அரசியல் வாதியாக, திறமை மிக்க போராட்ட வீரராக எண்ணி வந்தவர்கள் அவர்கள் தான். இந்த இயக்கத்தின் ஆணிவேர் - அச்சாணி

இயக்கங்கள், போராட்டங்கள் என்று வரும் போது மாவட்ட அளவிலான சுகவாச அரசியல் தலைவர்கள் பலர் ஒதுங்கக் கூடும். அதனால் அந்த இயக்கத்திற்கு எந்தவித இழப்பும் ஏற்படப் போவதில்லை அண்ணா தி. மு கழகத்தை எம். ஜி. ஆர் தோற்றுவித்த போது மாவட்ட அளவிலான தலைவர்கள் கூட அவர் பின்னே வரவில்லை. ஆனால், அவரை நம்பி லட்சோப லட்சம் இளைஞர்கள் அணிவகுத்தனர்.

அதே நிலையில் தான் இன்றைக்கு வை கோ நிலையும் திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தல் எதிர் கொண்டது. அந்தத் தேர்தலில் அண்ணா. தி. மு கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ள மைய ஆளும் கட்சி பகிரத முயற்சி

செய்தது. ஆனால், எம். ஜி. ஆர் அந்த முயற்சிக்கு இரையாகவில்லை.

தி. மு. க இரண்டாகப் பிளவு பட்டதாலேயே சுலபமாக வெற்றி பெறலாம். என்று அன்றைய சிண்டிகேட் காங்கிரஸ் கட்சி கருதியது. ஏனெனில் அன்றைய தி. மு. க அரசு மீது பெருந்தலைவர் காமராஜர் ஊழல் புகார்கள் கூறி தொடர்ந்து பிரசாரம் செய்து வந்தார். அந்தப் பிரசாரம் பலன் தரும் என்றும் எதிர்பார்த்தார். தி. மு. க, அண்ணா தி. மு. க இரண்டுமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்றார்.

பெருந்தலைவர் காமராஜர் ஊழல் புகார் சொன்னபோது காது கொடுக்காத மக்கள், அதே புகார்களை எம். ஜி. ஆர் சொன்ன போது நம்பினார்கள். அன்றைக்கு எம். ஜி. ஆர் மீது மக்கள் எத்தகைய நம்பிக்கை வைத்திருந்தார்களோ, அதே நிலையில் தான் வை கோ. விற்கு.

பெருந்துறை மைலாப்பூர் தொகுதி இடைத் தேர்தல்களில் கருணாநிதியின் தி. மு. கழகத்தை விட அதிக வாக்குகள் வாங்கினால் போதும் என்ற எண்ணம் வை. கோ. அணியில் இப்போது மேலோங்கி நிற்கிறது நடைமுறையில் இந்த எண்ணம் எத்தகைய பலனளிக்கும்?

பலம் வாய்ந்த எதிர்க்கட்சியான தி மு. க வின் கவனம் முழுவதும் வை. கோ. மீது தான். கடந்த ஆறு மாதங்களுக்குப் பின் இப்போதுதான் கருணாநிதியின் கவனம் ஆளுங்கட்சி பக்கம் ஓரளவு திரும்பியிருக்கிறது.

இந்த நிலையில் வெறும் நம்பிக்கைகளும் - கூடுகிற கூட்டமும் மட்டுமே எதிர்க் கட்சிகளுக்கு பலம் சேர்க்காது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நன்றி: தினமணி

## தமிழக மீனவரை காக்க நடவடிக்கை எடுக்குக

மத்திய அரசிடம் ஜெயலலிதா வற்புறுத்து

விட்ட நிலையில், ஒரு தேர்தல் ஆண்டில் தமிழர் பிரச்சினையை இனப்பிரச்சினை என்றும், தேசியப் பிரச்சினை என்றும் ஏற்றுக் கொள்வது வரவேற்கத்தக்கதும், முக்கியமானதும்தான் என்பதில் சந்தேகம் இல்லை.

மேலும், வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு இராணுவத் தீர்வுதான் என ஐ. தே. க. அரசாங்கம் முழு மூச்சாகச் செயற்படுகையில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்துள்ளமையும், அரசியலில் குறிப்பிடத்தக்கதொரு விடயம் என்றே கொள்ள முடியும்.

இவ்வாறாக, இனப்பிரச்சினை விடயத்தில் சில முன்னேற்றகரமான கருத்துக்களை பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டிருப்பினும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு எந்த வகையான திட்டத்தை அக்கட்சி கொண்டுள்ளது என்பதே முக்கிய கேள்வியாகும். ஏனெனில், இனப்பிரச்சினையானது பெரிதும் சிக்கலானதாகும். இதனால், இது குறித்து கடந்த காலத்தில் வெளியிடப்பட்ட முன்னறிவிப்புக்கள், நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பல தோல்வியில் முடிவடைந்துள்ளன

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதானால் அது எதன் அடிப்படையில் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என பொதுஜன ஐக்கிய முன்னணியினர் வெளியிடுதல் வேண்டும். அல்லது அது குறித்து எவரும் நம்பிக்கை கொள்ள முடியாது. ஏனெனில், அனுபவங்கள் இவற்றிற்கு மாறாகவுள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியே கடந்தகாலத்தில் இனப் பிரச்சினைக்கான தீர்வுகளை தானே முன்வைத்து அதை தானே நிராகரித்தும் உள்ளது.

இந்த வகையில் பார்க்கும்போது இனப்பிரச்சினை என ஏற்றுக் கொள்வதும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் எனத் தெரிவிப்பதும் முன்னேற்றகரமானவையாக இருப்பினும், அதன் பலாபலன் எவ்வாறு தீர்வு காணப்படப் போகின்றது? இதனைத் தமது உரிமைக்காகப் போராடும் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? என்பதைப் பொறுத்தே தங்கியுள்ளது. அல்லாது போனால், கடந்த காலத்தைப் போல் பேச்சுவார்த்தை என்பது பேச்சளவிலதானதாக மட்டுமே இருக்க முடியும். இதனால், பிரச்சினை எவையும் தீர்ந்து விடப் போவதில்லை.

கொண்டது.

ஆனாலும், வடக்கே நான்கு மாநிலங்களில் நடந்த சட்டப்பேரவைத் தேர்தல் முடிவிற்குப் பின்னர் அண்ணா தி.மு. கழகத்தார்க்கு ஒரு தடுமாற்றம். தற்போது நடைபெறும் நாடாளுமன்றக் கூட்டம் துவங்குவதற்கு முதல் நாள் என்ன நடந்தது? நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளின் அண்ணா தி.மு. கழகத் தலைவர்கள் பிரதமரைச் சந்தித்தனர். நாடாளுமன்ற நடவடிக்கைகளில் காங்கிரஸ் ஆட்சிக்கு ஆதரவு தருவதாகத் தெரிவித்தனர். அவர்கள் நிபந்தனையற்ற ஆதரவு தெரிவித்ததாகவும் செய்திகள் வந்தன.

தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் கொதித்து எழுந்தனர். இனி, அண்ணா தி.மு.க உறவே வேண்டாம் என்று போர்க் கொடி தூக்கினர்.

மாநில காங்கிரஸ் கட்சியின் கருத்திற்கு விரோதமாக அகில இந்தியத் தலைமை எந்த முடிவும் எடுக்காது. இனி, அண்ணா தி.மு.க உறவு தேவையில்லை. இதில் தங்கபாலுவைத் தவிர அனைவரும் ஒருமித்த கருத்தே கொண்டிருக்கிறோம். என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறினார்.

ஆனால், தமிழக மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்? அண்ணா தி.மு. கழகம் தாமே முன் வந்து உறவை முறித்துக் கொண்ட பின்னரும் - காங்கிரஸ் கட்சி தமிழக மக்களுக்கு துரோகம் செய்துவிட்டது என்று தமிழக முதல்வரே பகிரங்கமாக அறிவித்த பின்னரும் - இனி, காங்கிரஸ் கட்சியை இடைத்தேர்தல்களில் கூட டெபாசிட்

நீடித்திருந்தால் கடந்த தேர்தலில் அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாக காங்கிரஸ் கட்சியே ஆட்சிபீடம் ஏறியிருக்கும் அல்லது வலிமை கொண்ட கட்சியாகவாவது உருவாகியிருக்கும்.

காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டி என்ற மூப்பனாரின் நிலையை அன்றைக்குக் கடுமையாகத் தாக்கியவர் வாழப்பாடி. ஆனால், இன்றைக்கு அதற்காக வருந்துபவரும் அவர்தான்.

தமிழகத்தைப் பொறுத்த வரை காங்கிரஸ் கட்சிக்கு இரண்டே வழிகள்தான் இறந்திருக்கின்றன. வெற்றி, தோல்விகளைப் பற்றி கவலை கொள்ளாது தனித்தே தேர்தலில் போட்டியிடுவது என்பது ஒரு வழி, அதற்கு கட்சி அமைப்புக்களை அடிமட்டத்திலிருந்து பலப்படுத்தியாக வேண்டும் இரண்டாவது வழி இன்னொரு திராவிட இயக்கமான தி.மு.கவுடன் தேர்தல் உறவு கொள்வது'

எம்.ஜி.ஆர் தலைமையில் அமைந்த அரசை டிஸ்மிஸ் செய்துவிட்டு காங்கிரஸ் கட்சியும் தி.மு. கழகமும் கூட்டணி கண்டு சட்டமன்றத் தேர்தல் களத்திற்கு வந்தன எம்.ஜி. ஆர். அரசைக் கலைத்து அநியாயம் என்பதால் அப்போது அந்தக் கூட்டணியை மக்கள் அடியோடு புறக்கணித்தனர். ஆனால், இன்றைக்கு அந்த நிலை இல்லை.

அரசியல் சூழ்நிலைகள் மாறிவருகின்றன பழனி, ராணிப்பேட்டை இடைத் தேர்தல்களில் அண்ணா தி.மு.கழகம் தமது அனைத்து சக்தியையும் ஒருங்கிணைத்து களத்தில் இறங்கியது. அப்படியிருந்தும் கடந்த பொதுத் தேர்தலின் போது கிடைத்த வாக்குகள்

ஆரம்பிக்கவில்லை.

என்ன காரணம்? எங்கே கோளாறு?

## சோலை

முன்னர் ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியின் தவறுகளைச் சுட்டிக் காட்டித் தான் தி மு. கவும் வளர்ந்தது. ஆளும் கட்சியான தி. மு. கழகத்தின் குறைபாடுகளைக் கோடிட்டுக் காட்டித் தான் அண்ணா. தி மு. கழகம் வளர்ந்தது.

அண்ணா தி மு. கழகம் தோன்றிய மூன்று மாதங்களிலேயே எத்தனை எத்தனை போராட்டங்கள்? மக்களின் அதிருப்திக்குள்ளான எந்தப் பிரச்சினைகளையும் எம், ஜி, ஆர் விட்டு விடவில்லை.

ஆனால், இன்றைக்கு இளைஞர்களை நேரடியாகப் பாதிக்கின்ற எத்தனை, எத்தனை பிரச்சினைகள் இருக்கின்றன?

மாநில அளவிலான பிரச்சினைகள் மாவட்ட அளவிலான பிரச்சினைகள் மலிந்து கிடக்கின்றன. போராட்டங்களைத் தேடி அலையவேண்டியதில்லை. ஆனால், பிரச்சினைகளை எதிர் நோக்கும் போது வெறும் காகித அறிக்கைகளோடு நழுவிச் செல்வது வளரும் இயக்கங்கள் மேலும் செல்வாக்குப் பெற உதவி செய்யாது.

வை. கோ. வின் தி. மு. கழகத்திற்கும் இன்றைக்கு இரண்டே வழிகள் தான் தென்படுகின்றன. ஒன்று அரசின் தவறுகளைச் சுட்டிக் காட்டி எதிர்

## மத்திய அரசிடம் ஜெயலலிதா வற்புறுத்து

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினரின் தாக்குதல் குறித்து மத்திய அரசாங்கத்திடம் எடுத்துக் கூறி நடவடிக்கை எடுக்கும்படி கோரியிருப்பதாக தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா நேற்று முன் தினம் சட்டப் பேரவையில் கூறினார்.

இலங்கைக் கடற்படை அந்நிய நாட்டுப் படை என்பதால் அவர்கள் மீது மாநில அரசு நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது அதனால் மத்திய அரசை இது விஷயத்தில் நடவடிக்கை எடுக்கும்படி தொடர்ந்து வற்புறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து பிரதமருக்கு தாம் பக்ஸ், தந்தி, மற்றும் கடிதங்களை அனுப்பியிருப்பதாகவும் தொடர்ந்து இவ்வாறு வற்புறுத்தி வந்த காரணத்தினால் மத்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திருப்பதாகவும் குறிப்பிட்ட ஜெயலலிதா இதற்குப் பின்னரும் தாக்குதல் சம்பவம் நடந்திருப்பது பற்றி மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி மீண்டும் வற்புறுத்துவேன் என்றார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.04.23- சனிஇரவு

08.01 ற்கு - அறிவியற்கலசம்
08.10 ற்கு - தாயகப் பாடல்கள்
08.25 ற்கு - நேயர் கடிதங்கள்
08.30 ற்கு - செய்திகள்
08.40 ற்கு - சித்திரம் ''எமது தேசம் தமிழீழம்''

1994.04.24 - ஞாயிறு காலை

07.02 ற்கு - மாவீர வணக்கம்
07.15 ற்கு- களத்தில் மலர்ந்தவை
07.30 ற்கு - செய்திகள்
07.35 ற்கு - பத்திரிகைச் செய்திகள்
07.40 ற்கு- களத்தில் மலர்ந்தவையின் தொடர்ச்சி

## போர் விமானம் வாங்குவோம்

(இஸ்லாமாபத்)

பாகிஸ்தான் பாதுகாப்புத் துறையை பலப்படுத்தும் வகையில் தாம் புதிய டாங்கிகள் நீர்மூழ்கிகள், ஜெட்விமானங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்யப் போவதாக பிரதமர் பெனாசீர் பூட்டோ தெரிவித்துள்ளார்.

ராவல்பிண்டியில் இராணுவத் தளபதிகள் பலர் கலந்து கொண்ட பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். பாகிஸ்தானில் அணு ஆயுத உற்பத்தி விவகாரம் சர்ச்சைக்குரியதாக உள்ளது இந்த விடயத்தில் நாம் விட்டுக் கொடுக்க மாட்டோம். பாகிஸ்தானின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த என் அரசு தீவிர முயற்சி எடுக்கும். எப்-16 ரக போர் விமானங்களை விலைகொடுத்து அமெரிக்காவிடமிருந்து வாங்குவோம் என்றார்.

# சிறிலங்காவுடன் உறவை வளர்க்க இந்திய பிரதமர் ராவ் விருப்பம்

(டில்லி)

சிறிலங்காவுடன் எல்லாத் துறைகளிலும் உறவை வளர்த்துக்கொள்ள இந்தியா விரும்புவதாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்துள்ளார். சிறிலங்கா - இந்தியா கூட்டுக் குழுவில் எட்டப்பட்ட முடிவு விரைவில் செயற்படுத்தப்படவேண்டும் என தாம் விரும்புவதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவிலுள்ள பௌத்த தலங்களுக்கு சிறிலங்கா யாத்திரிகர்கள் மீண்டும் வருவதற்கு வகை செய்யவேண்டும் எனவும் இதில் இந்தியா அதிக அக்கறை காட்டுவதாகவும் சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீட்டிடம் புது டில்லியில் சந்தித்துப் பேசிய போது இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

முன்னதாக அமைச்சர் ஹமீட் சிறிலங்காவின் தற்போதைய நிலைமைகள் குறித்து இந்தியப் பிரதமரிடம் விளக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அதிபர்கள் கூட்டம்

சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட பாடசாலை அதிபர்கள் கூட்டம் இம் மாதம் 27 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள மகாஜனக் கல்லூரியிலும் நடைபெறும்.

# யாழ். செல்ல சர்வமதகுழு தயாராகி வருகின்றதாம்

சிறிலங்காவின் சர்வ மதக் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கான சமாதான விஜயம் ஒன்றை மேற்கொள்ள தயாராகிவருவதாக அதற்கு தலைமை வகிக்கும் மாதம்பே ஆகமிக அஸ்ஸாஜி தேரோ தெரிவித்துள்ளார்.

லண்டன் பி-பி- ஸியின் சிங்கள சேவை சந்தேசியவுக்கு அவர் அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் யாழ்ப்பாணம் செல்வதற்காக தான் விடுத்த அழைப்பிற்கு பல்வேறு பிரிவுகளைச்சேர்ந்த பௌத்த பிக்குகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும்நானூறுக்கு மேற்பட்டவர்கள் விருப்பம் தெரிவித்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர்கருத்துத் தெரிவிக்கையில் இதற்கு முன்னர் நான்கு தடவைகள் பௌத்த பிக்குகளின் குழுவினர் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொண்டதாகவும் இவர்கள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டதாகவும் இதில் இருதரப்பினரிடையே கருத்துப்பரிமாற்றம் நடைபெற்றதாகவும் ஆனால் பயன் தரக் கூடிய தீர்வொன்றை ஏற்படுத்தும் நிலை ஏற்படவில்லையென்றும் எனவே இம் முறை செல்லும் குழுவில் கிறிஸ்தவ மற்றும் இந்து மத குழுவினரை உள்ளடக்க தாம் எண்ணியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்-

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதானமுயற்சிகளை மேற்கொள்ள மதத் தலைவர்கள் சேவை அப்பரியது என்பதை வலியுறுத்தவே இந் நடவடிக்கை என்றார்.

எப்படி இருந்த போதும் தற்போது பௌத்த பிக்குமார் நானூறுக்கும் அதிகமானவர்கள் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ள போதும் சில காரணங்களை முன்னிட்டு சிலரும் செல்ல முடியாதுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சகல பீடங்களையும் உள்ளடக்கும் வகையில் குழுவொன்றை தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இது தற்போது நிறைவு பெறும் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஏழுமலை கொலை விவகாரம்

# மத்திய புலனாய்வுத்துறை விசாரணை வேண்டும்

(சென்னை)

வை. கோபாலசாமி ஆதரவாளரான ஏழுமலை என்பவர் சில நாட்களின் முன் சென்னையில் கொல்லப்பட்டது தொடர்பான புலன் விசாரணையை மத்திய புலனாய்வுத் துறையிடம் விட வேண்டும் என தி.மு.க உறுப்பினர் பரிதி இளம்வழுதி தமிழக சட்டப்பேரவையில் கோரிக்கை விடுத்தார்.

இக் கொலை வழக்கில் தமது கட்சியான தி.மு.க மீது பொய் வழக்கு போடப்பட்டதாகவும் இதில் பாரபட்சமற்ற முறையில் விசாரணை மேற்கொள்ளவும் உண்மையான குற்றவாளியை கைது செய்யவும் இவ் விசாரணையை மத்திய புலனாய்வுத்துறையிடம் விடவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

சாதாரண பயிலுநர் ஆசிரியருக்கு

# 4 வருடம்பூர்த்தியின்பின்பே நிரந்தர நியமனம்

(நல்லூர்)

சாதாரண பயிலுநர் ஆசிரியர் நிரந்தர நியமனம் பெறுவதற்கு 1994 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் 4 வருடகாலப் பயிற்சியை முடித்திருக்க வேண்டும் என்று வட-கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் சுற்று நிருபம் ஒன்று தெரிவிக்கின்றது. சாதாரண பயிலுநர் ஆசிரிய நிரந்தர நியமனம் அண்மையில் நடைபெறவுள்ளது.

நான்கு வருடகால பயிற்சியை முடித்துக் கொண்டவர்களின் நிரந்தர நியமனம் 1994 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து செயற்படும். அத்திகதிக்குப் பின்பு தகுதி பெறுபவர்கள், நான்கு வருடகாலம் முடிவடையும் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் நியமிக்கப்பட வேண்டும் என்று அச் சுற்று நிருபம் மேலும் தெரிவிக்கின்றது.

முதல் சம்பள ஏற்றத்தைப் பெறுவதற்கு பயிலுநர் ஆசிரியர் பாடநெறியைப் பூர்த்தி செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## காலை செய்தி நேர மாற்றம்

''புலிகளின் குரல்'' வானொலியின் காலைச் செய்திகள் இன்றுமுதல் 7.30 மணிக்கு ஒலிபரப்பாகும். இதுவரை காலமும் இது 7.45 மணிக்கு ஒலிபரப்பாகி வந்தது.

# அகதிகளை திருப்பி அனுப்ப சுவிஸ் தீவிர முயற்சி

(லண்டன்)

சுவிஸ்சர்லாந்தில் அகதிகளாக தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களை திருப்பியனுப்ப சுவிஸ்சர்லாந்து அரசு எடுக்கும் முயற்சியைமறுபரிசீலனை செய்யும்படி சுவிஸ்சில் உள்ள தமிழர் நலன் காக்கும் அமைப்புகள் சுவிஸ் அரசுக்கும், யூ என் எச் சீ ஆர்க்கும் வேண்டுகோள் விடுத்துள்ளன

1990 இற்கு பின்னர் வந்த 12 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் யூ என் எச் சீ ஆரின் மேற்பார்வையின் கீழ் திருப்பியனுப்பப்படுவர் எனவும் முதற்கட்டமாக இவ் வாண்டு இவ்வாறு 600 பேர் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுவர் எனவும் சுவிஸ் நீதித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அகதிகளை திருப்பியனுப்புவதில் சுவிஸ்சர்லாந்து சர்வதேச விதிமுறைப்படி நடக்கும் எனவும் குழப்பநிலை நீங்கிய பகுதிகளை.சேர்ந்தவர்கள்மட்டுமே திருப்பியனுப்பப்படுவர் எனவும் சுவிஸ் அதிகாரிகள் கூறுகின்றனர் சுவிஸ்சர்லாந்தில் தற்போது 20 ஆயிரம் தமிழ் அகதிகள் உள்ளனர் இவர்களில் அநேகர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளூடாக எல்லைதாண்டி சுவிஸ் வந்தவர்கள்

யூகோஸ்லேவியா, துருக்கி நாடுகளிலும் இருந்து சுவிஸ்சர்லாந்தினுள்அகதிகள் வருவதனால் அகதிகள்தொகையை கட்டுப்படுத்த சுவிஸ் அரசு இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்புவதன் மூலம் அகதிகள் விடயத்தில் இனி சுவிஸ் அரசு கடுமையாக நடந்துகொள்ளும் என்ற செய்தியை வெளிக்காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இந்தியாவிலிருந்து திரும்பியோர்

# கிராம சேவையாளரிடம் பதிவுசெய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து திரும்பி வந்துள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கு அவர்களை தத்தமது கிராமசேவையாளர்களிடம் பெயர்களை பதிவு செய்யும்படி புனர்வாழ்வுப் பிரிவினர் கோரியுள்ளனர்.

1990 ஜூன் மாதத்தின் பின்னர் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்றவர்களில் பலர் திருகோணமலையிலிருந்து கப்பல் மூலமும், வேறு மார்க்கமாகவும் யாழ் குடாநாட்டிற்கு வந்துசேர்ந்தமை தெரிந்ததே

இவ்வாறு வெவ்வேறு வழிகளில் மீள வந்து சேர்ந்தவர்கள் உடனடியாக தமது கிராமசேவையாளர்களிடம் பெயர்களை பதிவு செய்யும்படி புனர்வாழ்வுப் பகுதியினர் கோரியுள்ளனர்.

இந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (தி)

## குண்டு

துக் கொள்வதே அவர்களது முயற்சியாக இருக்கிறது என அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்கிசை குண்டு வெடிப்பில் இறந்த அருள்தாஸ் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு முக்கிய உறுப்பினராவார் எனவும் அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கிரிக்கட் போட்டி

அமரர் ஒரேற்றர் சி சுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்தமாக ஸ்கந்தா பழைய மாணவர் சங்கமும், சுன்னாகம் சரா சேது விபஏயிற் நிறுவனங்களும் இணைந்து நடாத்தும் துடுப்பெடுத்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வீனஸ், பற்றீசியன்ஸ், ஜொலி ஸ்ரார்ஸ், கொக்குவில் சி.சி சி. ஸ்கந்தா ஐ சி, ஸ்ரான்லி, மானிப்பாய் பரிஸ், செஞ்சிறலயிட்ஸ் சொக்ஸ் கிறாஸ் கொப்பர், ஆர்.டி. எஸ் ஆகிய அணிகள் விளையாடவுள்ளன இப்போட்டிகள் இன்று காலை முதல் மாலைவரை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

## யாழ். குடாநாட்டில்

அதிகாரி பகுதியிலேயே அதிக அளவிலான மலேரியா நோயாளர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு 2037 பேர் மலேரியா நோயினாலும் 96. பேர் மூளை மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிய வருகிறது. (நி)

# நிர்வாக உத்தியோகத்தர்; பதவி உயர்வு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

01-01-1979க்கு முன்னதாக இலங்கை நிர்வாக சேவைக்கு நியமனம் பெற்ற உத்தியோகத்தர் யாவருக்கும் 04-03-92 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை நிர்வாக சேவையின் முதலிடம் வகிப்பிற்கு மேலதிக ஆளணி பதவிகளுக்கு (SUPER NUMERY) பதவி உயர்வு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை ஒன்றின் பிரகாரமே இப்பதவி உயர்வு செய்வதென அறிவிக்கப்பட்டுள்ளது.

01 - 01 - 1979-ன் முன் ... சேவையிலிருந்து இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பிற்குஇணைத்துக்கொள்ளப்பட்ட உள்ளூராட்சி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களிலும் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களில் முதுநிலைமுன்னுக்குகொண்டு செல்லப்படுகின்றது (தி)(ச)

## பொதுச்சபை கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கால்நடை ...

## தேசங்களின்

17 வருடமாக இந் நாட்டில் கொடுங்கோல் ஆட்சி நடாத்திய ஐ. தே. கட்சி அரசாங்கத்திற்கு சாவு மணி அடிக்க இம் மேநாளில் அனைவரும் அணி திரள்வோம்

தமிழ் மக்களும், மனித நேயமுள்ள சமூக அமைப்புக்கள் காட்டிய சமாதான நேசக்கரங்களை புறக்கணித்த ஐ. தே. க. அரசை தூக்கி எறிவோம்.

தமிழ் மக்களுக்கெதிராக ஐ தே க அரசு விதித்த அனைத்து தடைகளையும் தாண்டி எம்மக்கள் தமிழீழ தேசத்தை நிர்மாணிக்க தொடங்கி விட்டார்கள். வருகின்ற மே நாள் தமிழீழத்துக்கான விடியலாக இருக்கட்டும், இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீரச்சாவு

வர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவு அடைந்த 2 ஆம் லெப். நல்லதம்பி (கபிரியேல் அன்ரனி பர்னாந்து நெடுங்கண்டல் மன்னார்) என்பவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கொலரா

கரணவாய் வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த மாணிக்கம் சோதி (வயது 55) என்பவரே கொலராவுக்கு இலக்காகி பலியாகியவராவார் மேலும் இக்நோய்க்கு இலக்காகி சிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (யோ)

## பயிலுநர்

பணிப்பாளர் அறிவித்துள்ளார்:

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தொலைக்கல்வி பயிற்சிநெறி சம்பந்தமான பரீட்சை தகவல்களையும், முன்னர் தங்களுக்கு வழங்கப்பட்ட நியமனக்கடிதம், கல்வித்தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் என்பனவற்றையும் தொ...

## வடக்கு கிழக்கு

கள் தெரிவிக்கின்றன

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கைகள் மூலமாக அல்லாமல் சமாதான முறையில் தீர்வு காண்பதற்குமுயற்சிக்கப்படும் என்ற அடிப்படையிலேயே தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படும் என்று பேராசிரியர் ஜி-எல்- பீரிஸ் தெரிவித்துள்ளார்,

மேற்படி தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்ட பின்னர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும், தேர்தலுக்கான ஏனைய தயாரிப்பு வேலைகளையும் முடுக்கிவிடும் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன-

## திருமலையில்

## தக்க

சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், நாட்டின் சனத்தொகையில் நாம் 5 வீதமாக இருப்பதால் அரசுடன் ஒத்துப்போகும் நிலையில் உள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

01 - 01 - 1979-ன் முன் நியமனம் பெற்ற சகல நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் நீண்டகாலம் முதலாம் வகுப்பு பதவியுயர்வுக்கு காத்திராது குறுகிய காலத்தில் முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெறுவதற்கு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 4 - 3 - 1992-ல் இருந்து உள்ளூராட்சிநிர்வாக

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் திரு க. சிவபாதசுந்தரம் தலைமையில் இடம் பெறவுள்ளது என சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி நா. சகுந்தலா அவர்கள் தெரிவித்துள்ளார்.

(86)

ளது.

மற்றும் மே நாள் சம்பந்தமான மகாநாட்டில், வருகின்ற மே நாளை அனைத்து வெகுஜன அமைப்புக்களும் சிறப்பான முறையில் கொண்டு நடாத்த வேண்டுமென யாழ் மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் கேட்டுக்கொண்டார். அவர் தமதுரையில் மே தினம் இம்முறை பெரிய அளவில் எழுச்சி தரக்கூடியதாக இருக்க வேண்டும், அது எதிரிக்கு அரசியல், இராணுவரீதியான அடியாக இருக்க வேண்டும். மற்றது சர்வதேச சமூகத்துக்கு பெரும் பதில் அடியாக இருக்க வேண்டுமென கூறினார்.

மற்றும் பல வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை வழங்கினார்கள். இக்கருத்துக்களின் அடிப்படையில் மிகப் பெரிய அளவில் இம் மே நாளை கொண்டாட அனைத்து செயல் திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன இம் மாநாள் எமது மக்களின் விடிவை நோக்கி வேகமாக செல்லட்டும்.

## திருமலை

எனவும் இவர்கள் குடாநாடு மீதான தாக்குதலில் பங்குபற்றுவர் எனவும் இராணுவ வட்டாரங்கள் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

சீனா மற்றும் வேறுசில நாடுகளிலிருந்து சிறிலங்கா அரசு ஆயுதக்கொள்வனவை ஆரம்பித்துள்ளதால் இந்த ஆயுதங்கள் மே மாதமளவில் வந்து சேர்ந்ததும் யாழ்ப்பாணம் மீதான தமது இறுதித் தாக்குதலை இராணுவம் மேற்கொள்ளும் எனவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## கட்சியிலுள்ள

தால். தற்போது கட்சியில் சர்ச்சைக்குரிய அநேகர்களுக்கு கட்சி சார்பில் போட்டியிட அனுமதி கிடைக்காது என்பதுடன் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வி அடைவதைத் தடுக்க முடியாது என அவதானிகள் கூறுகின்றனர்.

கள் என்பனவற்றையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.


யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்

SYLVESTER-STALLONE

நடித்த

**RAMBO**

தினசரி மாலை 4.00, 6.00

சனி, ஞாயிறு காலை 10 30

மாலை 4.00, 6-00 மணி

பெப்ரவரி 94

ஒளிவீச்சு

சனி, ஞாயிறு பி பகல் 2-30 மணிக்கு காண்பிக்கப்படும்

(சி-9223)


## திருமலையில்

பட்டன இருந்தும் திருகோணமலைப் பொலிசாரின் சந்தேகம் நீங்கவில்லை பின்னர் கடற்படை அதிகாரி ஒருவர் வாகனத்துக்கு உரிமைகோரியதின் பேரில் அவரது வாக்குமூலத்தை பொலிசார் பதிவு செய்து கொண்டனர் அதன் பிறகு வாகனம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது- விசாரணையின்போது, அந்த வாகனம் இயந்திரக் கோளாறு காரணமாக இரவு அந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது-

ஊள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

## உல்லாச

தங்களும் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பும் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சந்திரிகா

கொண்டால் அவர் தம்மைத் தாமே தலைவராக நியமித்துக் கொண்டாரே தவிர அவர் கட்சியினால் தெரிவானவரல்ல என்றும் திலக்கருணாரட்ண மேலும் தெரிவித்தார்.


மிக விரைவில்...

உங்கள் கண்ணெதிரில்.

போராளிகளும் மக்களும் இணைந்து வழங்கும்

நிதர்சனம் நிறுவனத்தின் சிறப்பு வெளியீடு

**காற்று வெளி**

தரமான கலைப் படைப்பின்

திறமான கருத்தோவியம்

- மக்களோடு புலிகள்
- சண்டைக் காட்சிகள்
- நெஞ்சையுருக்கும் சம்பவங்கள்

உங்கள் இதயங்களில் இடம் பிடிக்கும் இன்னும் பல அரிய கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகள்

மறவாதீர்கள் காற்று வெளி

தவறாதீர்கள் பார்த்து மகிழ

இது ஒரு நிதர்சனம் தயாரிப்பு

(சி-9234)



A/L - 96 பிரிவு 11

கலை வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 30-04-1994 (காலை 7 மணி)

23-04-94 (சனி) முதல்

உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி · யாழ்ப்பாணம்

(சி-9245)


# மரண அறிவித்தல்

## அந்தோனியாப்பிள்ளை மனுவேற்பிள்ளை

(பொன்னம்மா)

சில்லாலை தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் வசித்தவருமான அந்தோனியாப்பிள்ளை (பொன்னம்மா) 22-4-94 அன்று காலமாகிவிட்டார். இவர் நீக்கிலாப்பிள்ளை மனுவேற்பிள்ளையின் அன்பு மனைவியும், மேரி மாகிறேற், மேரியோசேப்பின் அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரியும், எலிசபேத் சூசைப்பிள்ளை, மரியாம்பிள்ளை, செபஸ்தியாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, ஆரோக்கியம் (நேசம்), மரியதிரேசா (தவம்) அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23-4-94 (இன்று) பி.ப. 3 மணிக்கு உயரப்புலம் ஆனைக்கோட்டை இல்லத்தில் இடம்பெற்று புனித அடைக்கலமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியின் பின் பூதவுடல் சில்லாலை ஆரோக்கியமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:

நீ. மனுவேற்பிள்ளை

(கணவன்)

(சி- 9246)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.